'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 28 சோபகிருது வருடம், ஆடி மாதம் 15ஆம் திகதி திங்கட்கிழமை (31.07.2023) ஹிஜ்ரி 1445, முஹர்ரம் - 12, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## இலங்கைக்கான கடன் நிவாரண கூட்டு முயற்சியில் இணையுங்கள்



சீனாவுக்கு இந்தியா அழைப்பு

02 பக்கம்

# அரசியல் தீர்வில் பாரதம் அக்கறை!



### தமிழர் பிரச்சினை விடயத்தில் புதுடில்லி உன்னிப்பாக கவனம் செலுத்திவருவதாக கூறுகிறார் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே

இலங்கையில் தமிழர்களுக்கு தீர்வை வழங்குவதில் இந்தியா அன்று கொண்டுள்ள நிலைப்பாட்டையே இன்றும் கொண்டுள்ளது. அதில் எந்த சமரசத்தையும் நாங்கள் செய்யவில்லை. அதிகாரங்கள் பகிரப்படும் விதங்களை நாங்கள் உன்னிப்பாக அவதானிக்கிறோம். படிப்படியாக சில விடயங்களை செய்யவேண்டும்.

இலங்கை அரசும் மக்களும் அவற்றை தீர்மானிக்க வேண்டும்.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



ஆடிக்கலவரத்தில எரிச்சத நினைவுகூரும் நிகழ்வுக்கு ஒருத்தரையும் காணேல்ல... ஆனா ஆடிவேல் தேருக்கு வாற சிங்கள அரசியல்வாதிகளின் கூட்டத்தை பாருங்கோவன்..!

## வட மாகாணம் தமிழருடையதா என்ற கேள்வி வரலாம்

03 பக்கம்

## ஊடகர் தரிந்து பிணையில் விடுதலை

02 பக்கம்

## மலையக எழுச்சிப் பயணத்தின் 3ஆம் நாள் நடைபயணம் மன்னாரில் நிறைவடைந்தது



மன்னார் நகர் நிருபர்

மலையக எழுச்சி பயணத்தின் மூன்றாவது நாளான நேற்று பேசாலை வெற்றிநாயகி ஆலயத்தில் ஆரம்பமான எழுச்சிப் பயணம் மன்னாரை வந்தடைந்தது.

மூன்றாவது நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை (30) காலை 6.30 மணியளவில் பேசாலை வெற்றிநாயகி ஆலயத்தில் சர்வமதத் தலைவர்களின் ஆசியுடன் எழுச்சிப் பயணம் மன்னார் நகரை நோக்கி ஆரம்பமானது.இதன்போது மன்னார் மறைமாவட்ட...

02 பக்கம்

## தமிழ் எம்.பிக்களை சந்திக்கிறார் பாக்லே

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்திய உயர்ஸ்தானிகருக்குமிடையில் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

நாளை காலை 10.30 மணிக்கு இந்திய தூதரகத்தில் இந்த சந்திப்பு நடைபெறும்.

02 பக்கம்

## தரமற்ற மருந்துகளை ஆராய விசேட குழு

2022ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள தரமற்ற மருந்துப் பொருட்கள் தொடர்பாக ஆராய்வதற்காக 15 பேர் கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## தெளிவான மாற்றம் தேவை: உடன் தேர்தலுக்கு செல்க!



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

02 பக்கம்





அமைச்சரவையில் மாற்றம் செய்ய ஜனாதிபதி ரணில் முன்னர் தீர்மானித்திருந்தபோதும் அந்த தீர்மானம் இப்போது மீள்பரிசீலனையில் இருப்பதாக தகவல்.

இப்போது அமைச்சரவையில் இருக்கும் இளவயது எம்.பிக்கள், சிரேஷ்ட பிரமுகர்கள் சிலர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவளித்து களமிறங்கவுள்ளனராம். அவர்களில் பலர் ரணில் அமைக்கவுள்ள புதிய அரசியல் கூட்டணியில் இணையவுள்ளனராம். எனவே அவர்களை நெருக்கமாக வைத்துக்கொள்ளவே விரும்புகிறாராம் ரணில்.

## நிலமும் மக்களும் இல்லாத சமஷ்டியால் யாருக்கு பயன்?



### 13ஆவது திருத்தம் இருப்பைத் தக்கவைக்கும் என்கிறார் விக்னேஸ்வரன்

பதின்மூன்றாவது திருத்தத்தை வேண்டாம் என எதிர்ப்பவர்கள், எமது நிலமும் பறிபோய் இனப் பரம்பலும் மாற்றப்பட்டதன் பின் சமஷ்டியைப் பெற்று என்ன பயன் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் விக்னேஸ்வரன் கேள்வி எழுப்பினார்.

02 பக்கம்

## கறுப்பு ஜூலை நினைவுநாள் லண்டனில் அனுஷ்டிப்பு



02 பக்கம்



ஆடிவேல் இரதோற்சவ நிகழ்வு நேற்று (30) நடைபெற்றபோது அலரிமாளிகை முன்றலில் பிரதமர் தினேஸ் குணவர்தன சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன ஆகியோர் வழிபாடுகளில் ஈடுபட்டனர்

படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன






தொழில் மற்றும் முதலீட்டு மூலதன தேவைகளுக்கு குறைந்த வட்டியுடனான கடன்

நலிவடைந்திருக்கும் வியாபாரங்களை மீள கட்டியெழுப்பும் நிதி மறுசீரமைப்பு

புதிய தொழில்முனைவோருக்கான வியாபார ஆலோசனைகள் மற்றும் நிதித்துறை வசதிகள்

மேலதிக விபரங்களுக்கு இப்பொழுதே 0112 481608 / 0112 481356 / 0112 481426 க்கு அழையுங்கள் அல்லது அருகிலுள்ள மக்கள் வங்கியில் பெற்றுக் கொள்ளலாம்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

www.peoplesbank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

A (lka) ஃபிட்ச் ரேட்டிங், AAA- பிராண்ட் ஃபினான்ஸ் ரேட்டிங்

மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

# 'பேஸ்புக்' காதலனை தேடி இந்தியா சென்ற தமிழ் யுவதி



இலங்கையைச் சேர்ந்த இளம் யுவதியொருவர் தனது 'பேஸ்புக்' காதலனுடன் வாழ்வதற்காக இந்தியாவின் ஆந்திர பிரதேசத்துக்குச் சென்றுள்ளார்.

சிவகுமாரி விக்னேஷ்வரி (வயது 25) என்ற பெண், தனது 06 ஆண்டுகால பேஸ்புக் நண்பரான லட்சுமணனை (வயது 28) திருமணம் செய்து கொள்ள சுற்றுலா விசாவில் இந்தியா சென்றுள்ளார்.

பேஸ்புக் காதலன் லட்சுமணன், ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

இலங்கைப் பெண் பேஸ்புக் காதலனை தேடி வந்த செய்தி ஆந்திராவில் சமூக ஊடகங்களில் வைரலானதையடுத்து, ஓகஸ்ட் 15 ஆம் திகதி விசா காலாவதியாகும் முன் அவர் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் அல்லது நீடிப்பு பெற வேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தினர்.

இந்த காதல் ஜோடி திருமணம் செய்து கொள்ள முடிவு செய்த பின்னர், விக்னேஸ்வரி ஜூலை 8ஆம் திகதி ஆந்திராவுக்கு வந்தார். ஜூலை 20ஆம் திகதி சித்தூர் மாவட்டம் வி கோட்டாவில் உள்ள சாயிபாபா கோவிலில் இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

வி கோட்டா மண்டலத்தைச் சேர்ந்த அரிமகுலப் பள்ளியைச் சேர்ந்த மேசன் தொழிலாளியான லட்சுமணன், இலங்கையைச் சேர்ந்த விக்னேஷ்வரியுடன் பேஸ்புக்கில் 2017இல் அறிமுகமானார். விக்னேஷ்வரி ஜூலை 8ஆம் திகதி கொழும்பில் இருந்து சுற்றுலா விசாவில் சென்னை வந்தடைந்தார். அவரை வரவேற்க லட்சுமணன் சென்னை சென்றார். பின்னர் காதலியை வீட்டுக்கு அழைத்து வந்தார். லட்சுமணனின் குடும்பத்தினர் சம்மதத்துடன் ஜூலை 20ஆம் திகதி திருமணம் செய்து கொண்டனர்.

ஆனால் சித்தூர் மாவட்ட பொலிஸார் தம்பதியை தங்கள் முன் ஆஜராகுமாறு உத்தரவிட்டனர்.

விக்னேஷ்வரியின் விசா ஓகஸ்ட் 15ஆம் திகதியுடன் முடிவடையவுள்ள, சித்தூர் மாவட்ட பொலிஸ் (எஸ்.பி) வை ரிஷாந்த் ரெட்டி அவருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

அதற்குள் அவர் இலங்கை திரும்ப வேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தினர்.

ஆனால் விக்னேஷ்வரி தனது நாட்டுக்குத் திரும்ப மறுத்து, அவர் தனது கணவருடன் நிரந்தரமாக தங்குவதற்கு இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

விக்னேஷ்வரி இந்தியக் குடியுரிமையைப் பெறத் திட்டமிட்டுள்ளதாகவும் நடைமுறை மற்றும் அளவுகோல்களும் அவருக்கு விளக்கப்பட்டதாகவும் எஸ்.பி ஊடகங்களிடம் தெரிவித்தார்.

சனிக்கிழமையன்று இந்தியாவில் தங்குவதற்கான விசாவை ஒரு வருடம் நீடிக்க விண்ணப்பித்தார்.

"இந்திய குடிமகனை திருமணம் செய்து கொண்டதன் அடிப்படையில் அவருக்கு நீடிப்பு கிடைக்க வாய்ப்புள்ளது" என்று எஸ்.பி. மேலும் கூறினார். விக்னேஸ்வரி இலங்கையில் பலாங்கொடை, பத்தனாவத்த, இலுக்கும்புர, ஓபநாயக்கபுர என்ற முகவரியை சேர்ந்தவர்.

மேலும் எதிர்காலத்தில் சட்ட சிக்கல்கள் ஏற்படாமல் இருக்க, திருமணத்தை பதிவு செய்து கொள்ளுமாறு தம்பதியினருக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

# "மலையகம் 200" நடைபயணம்!

## பழனி திகாம்பரம் எம்.பி. அறிவிப்பு

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி நுவரெலியாவிலிருந்து ஹட்டன் வரையிலான ஊர்திகளுடன் கூடிய நடைபயணத்தை தமிழ் முற்போக்கு கூட்டணி நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் நேற்று (30) ஞாயிற்றுக்கிழமை ஹட்டன் அஜந்தா விருந்தகத்தில் இடம்பெற்ற சங்கத்தின் முக்கியஸ்தர்கள் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

நாம் இதுவரை காலம் மேற்கொண்டு வந்த விமர்சன அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு இனிமேல், மக்கள் நலன்சார்ந்த விடயங்களுக்கும் அபிவிருத்திகள் மற்றும் உரிமைகளுக்கும் குரல்கொடுக்க வேண்டிய காலத்தில் இருக்கின்றோம். அதுவே இன்றைய தேவையுமாகும். அடுத்தவர்களைப் பற்றி விமர்சிக்காமல் நாம் என்ன செய்யப்போகின்றோம் என்பதை மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

பெருந்தோட்ட மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்படும் மோசமான நிலையிலிருந்து விடுபட்டு இந்நாட்டில் ஏனைய சமூகத்தவர்களுக்கு இணையாக வாழ்வதற்கு காணி உரிமை அவசியமாகும். நல்லாட்சி அரசாங்கத்தில் தலா ஏழு பேர்ச் காணியில் தனிவீட்டுத் திட்டத்தை நாம் மேற்கொண்டிருந்தாலும் பூரணமாக நிறைவேற்ற முடியவில்லை. இன்றைய அரசாங்கத்தில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியாவிட்டாலும் தலா 10 பேர்ச் காணியை வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.



இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் இந்த நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு 200 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு "மலையகம் 200" நிகழ்வுகளை பலரும் நடத்தி வருகின்றார்கள். அரசாங்கம் டிசம்பர் மாதத்தில் நுவரெலியாவில் நடத்தவுள்ளதோடு, சில அரச சார்பற்ற நிறுவனங்கள் தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரை நடைபயணத்தை மேற்கொண்டுள்ளன. வடக்கு, கிழக்கு மற்றும் வெளிநாடுகளிலும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எமது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கடந்த கால, நிகழ்கால, எதிர்கால வாழ்வியல் சம்பந்தமான ஊர்திகளுடன் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி நுவரெலியாவிலிருந்து நானுஓயா, லிந்துல, தலவாக்கலை, கொட்டகலை ஊடாக ஹட்டன் மல்லியப்பூ சந்தி வரை நடைபயணத்தை மேற்கொள்ள தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் ஏற்பாடு செய்துள்ளோம். நடைபயணத்தில் நானும் பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், வீ. இராதாகிருஷ்ணன், எம்.உதயகுமார், வேலு குமார் உட்பட பலரும் கலந்து கொள்ளவுள்ளோம். அந்தந்த பகுதியில் உள்ளவர்கள் எம்மோடு இணைந்து கொண்டு மலையகத்தின் எழுச்சியை நாட்டுக்கும் உலகத்துக்கும் எடுத்துக் காட்ட வேண்டும். இது தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டங்கள் எதிர்வரும் 05ஆம் திகதி ஒரே நேரத்தில் மலையகத்தின் பல பிரதேசங்களிலும் இடம்பெறவுள்ளன. எனவே, சமூக உணர்வோடு அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றேன் என்றார்.

## கறுப்பு ஜூலை...

தமிழினத்தின் மீதான சிங்கள அரசின் திட்டமிட்ட இனப்படுகொலைகளில் ஒன்றான கறுப்பு ஜூலை படுகொலை இடம்பெற்று 40 ஆண்டுகால வலிசுமந்த நினைவு நாளினை முன்னிட்டு பிரித்தானியாவின் பெருநகர மத்தியில் சனிக்கிழமை திரண்ட புலம்பெயர் தமிழர்கள் நீதி வேண்டிய எழுச்சிப் பேரணி ஒன்றை நடத்தினர்.

ஈழம் அமைதலே தமிழ் மக்களின் நிரந்தர பாதுகாப்புக்கான ஒரே தீர்வு. அத்துடன் இலங்கையில் சுபிட்சத்துக்கும் ஸ்திரத்தன்மைக்குமான பாதையும் இதுவேதான் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு ஒன்று திரண்ட புலம்பெயர் தமிழர்கள் பிரித்தானிய அரசுக்கும் சர்வதேசத்துக்கும் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

தமிழரின் வரலாற்றுப் பக்கங்களில் அழிக்க முடியாத ரணங்களை கொடுத்த 1983ஆம் ஆண்டு ஜூலை இனக்கலவரம் நடந்தேறி 40 வருடங்கள் உருண்டோடிவிட்டன. பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் உயிரோடு ரயர்கள் போட்டு எரித்து கொல்லப்பட்டதுடன் தமிழ் மக்களுக்குச் சொந்தமான சொத்துகள் பலவும் தீக்கிரையாக்கப்பட்டு சூறையாடப்பட்டன.

இந்நிலையிலேயே இந்த மாபெரும் இனப்படுகொலை நடைபெற்று 40 ஆண்டுகள் ஆன நிலையில், இதுவரையில் எந்தவித நீதியும் கிடைக்காத நிலையில் சர்வதேசத்திடம் நீதி கோரி பிரித்தானிய புலம்பெயர் தமிழர்கள் சனிக்கிழமை மாலை Trafalgar சதுக்கத்தில் எழுச்சி பேரணியில் ஈடுபட்டனர்.

மாலை 05 மணியளவில் பிரித்தானிய கொடி மற்றும் தமிழீழ தேசியக் கொடி ஆகியன ஏற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பிரித்தானியாவில் உள்ள பல தமிழ் அமைப்புகள் மற்றும் தமிழ் பாடசாலைகள், சங்கங்கள் போன்ற அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து நடத்திய இந்நிகழ்வில் இனப்படுகொலைக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களின் உரைகள் இடம்பெற்றதுடன் தமிழர் மீதான படுகொலைகளை மாணவர்கள் கலை வடிவில் வெளிப்படுத்தினர். அதேவேளை 1983 இனப்படுகொலையின் பதிவுகளை சுமந்த விளக்க புகைப்படக் கண்காட்சியும் அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

## இலங்கைக்கான...

இலங்கைக்கான அதிக கடன் வழங்குநர் என்ற வகையில், ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளினால் மேற்கொள்ளப்படும் கடன் நெருக்கடியைச் சமாளிக்க உதவும் முயற்சியில் இணைவதற்கு சீனா வரவேற்கப்படுவதாக இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இந்திய – ஜப்பான் மன்றத்தில் உரையாற்றிய போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கடன் பாதிப்புகளை எதிர்கொள்ளும் நாடுகளுக்கான நிவாரண நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பவற்றுக்கு இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அழைப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச மற்றும் உலக வங்கியின் பொதுவான கட்டமைப்புக்குள்ளும் அதற்கு வெளியிலும் உள்ள சிக்கலைத் தீர்க்க சிறந்த மற்றும் விரைவான அணுகுமுறை தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஒரு நடுத்தர வருமானம் கொண்ட நாடு என்பதால் கட்டமைப்புக்கு வெளியே இருந்தாலும் இலங்கைக்கு விரைவான தீர்வு தேவை எனவும் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, ஏற்றுமதி தொடர்பான புள்ளி விபரங்கள் அடங்கிய தமது 36ஆவது வருடாந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

ஏற்றுமதி செயல் திறன் குறிகாட்டிகள் 2022 என பெயரிடப்பட்டுள்ள இதில் முதன்மையான புள்ளிவிபரங்கள் குறித்து விரிவாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையுடனான வெளிப்புற வர்த்தக சமநிலையினை பேணுதல் மற்றும் தனியார் துறைசார் ஈடுபாடுகள் போன்ற முக்கிய பொருளாதார விடயங்கள் குறித்த தகவல்கள் அதில் அடங்கியுள்ளன.

ஏற்கனவே ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியை மேற்கொள்ள திட்டமிட்டுள்ள வர்த்தகர்களுக்கு ஏற்ற பல்வேறு புள்ளிவிபரங்களும் குறித்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தெளிவான மாற்றம்...

நாட்டு மக்கள் கஷ்டப்படும்போது, வங்குரோத்து நாட்டிலுள்ள இந்த அரசாங்கம் மக்களின் தோளில் ஏறி கமிஷன் அடிப்பதாகவும் இப்போதும் கோடிகளில் கமிஷன் அடித்து, தங்கள் விருப்பப்படி எந்த நிறுவனத்துக்கும் கொள்முதல் பெற வாய்ப்பளிக்கப்படுவதனால் இந்நாட்டுக்கு பாரிய தொகை செலவாகும் நிலைமையை சுகாதார அமைச்சு செயல்படுத்துவதாகவும் இந்த வங்குரோத்து நாட்டில் நாட்டு மக்களை மரணப் படுக்கைக்கு கொண்டு செல்லும் வகையில் சுகாதார அமைச்சர் செயற்படுகிறார் என்றும் சுகாதாரத்துறை முழுவதும் இலஞ்சம் ஊழல் மற்றும் மோசடிகள் இடம்பெற்று வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (30) அநுராதபுரம் புனிதமிகு அபயகிரிய, உடமலுவ, ருவன்வெலிசாய, இசுருமுனிய, தூபாராமய மற்றும் சாரானந்த பிரிவெனா போன்ற வழிபாட்டுத் தலங்களுக்கு விஜயங்களை மேற்கொண்டிருந்ததோடு மகாசங்கத்தினரை சந்தித்து ஆசிகளையும் பெற்றுக் கொண்டார். தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் விசேட அறிவிப்பொன்றை விடுத்து கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,

தரக்குறைவான மருத்துவத்தால் உயிர்கள் பறிபோய்விட்டன. இந்நாட்டு மக்கள் பலியாக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் நாட்டில் தெளிவான மாற்றம் தேவை. இது மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதனால், இந்நாட்டை சரியான பாதைக்கு கொண்டு வந்து சிறப்பான ஆட்சியை அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்த முடியாவிட்டால் மக்கள் ஆணைக்கு செல்ல தயாராகுங்கள். இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார். மக்கள் சார் அரசை உருவாக்க தயார்.

தேர்தல்கள், பொதுமக்களின் கருத்துகளுக்கு அஞ்சாமல் இவ்வாறான கோழைத்தனமான செயற்பாடுகளை அரசாங்கம் தவிர்த்துக் கொண்டு உடனடியாக தேர்தலுக்கு செல்லவேண்டும்.

நாளுக்கு நாள் நமது நாட்டு மக்கள் நலிவடைந்த ஆட்சியினால் வறுத்தெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு, மக்களின் வாழ்க்கை அழிவின் விளிம்பில் உள்ளதோடு, சாதாரண மக்களுக்கும் பெரும் இருளில் மூழ்கியுள்ளனர். விவசாயிகளுக்கு தங்கள் நெல்லை நிர்ணயித்த விலைக்கு விற்க முடியாமல் உள்ளது. 60 முதல் 70 ரூபாவுக்கு அரிசி விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகளால் தமது செலவுகளை நிர்வகிக்க முடியாது போயுள்ளது. தமது அத்தியாவசிய சேவைகளைக் கூட செய்ய முடியாமல் கடனில் மூழ்கி தவிக்கும் நேரத்தில் சேனாப்பூச்சியின் அச்சுறுத்தல் காரணமாக விவசாயிகள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## தமிழ் எம்.பிக்களை...

இந்தியாவுக்கு அழைக்கப்பட்டிருந்த இலங்கை ஜனாதிபதி, 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயல்வதாக காண்பித்து வரும் சூழலில், தமிழ்த் தரப்புடனான சந்திப்பை இந்திய தூதரகம் ஏற்பாடு செய்துள்ளது.

## தரமற்ற மருந்துகளை...

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் சுகாதார அமைச்சுக்கு எதிராக கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளுக்கமைய கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பீ.சி. விக்ரமரத்ன இந்த குழுவை நியமித்துள்ளார்.

சுகாதார அமைச்சு வைத்திய விநியோகப் பிரிவு, மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, மருந்து உற்பத்திகள் ஆணைக்குழு, கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் நாட்டின் ஏனைய பிரதான வைத்தியசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வைத்தியர்களே இந்த குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தரமற்ற மற்றும் பதிவு செய்யப்படாமல் மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றுக்கு எதிராக தெரிவிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்தார்.

இதேவேளை, மருந்து கொள்வனவு மற்றும் விநியோகம் தொடர்பான கணினி கட்டமைப்பு தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த விசாரணைகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாகவும் கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்தார். இரண்டு மாத காலத்துக்குள் இந்த விசாரணை அறிக்கை பாராளுமன்றத்துக்கும் கையளிக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## அரசியல்...

இவ்வாறு கருத்து வெளியிட்டார் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே. ஜனாதிபதி ரணிலின் இந்திய பயணம் தொடர்பில் 'தமிழன்' பத்திரிகையுடன் கருத்துகளை பகிர்ந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி ரணில் மேற்கொண்ட இந்திய விஜயத்தின்போது இலங்கைக்கு நன்மையான பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அவை இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தி இலங்கை மக்களின் வாழ்வு நிலையை மேம்பாடடைய செய்ய உதவும் திட்டங்கள். கொரோனா காலத்திலும் சரி, அதற்குப் பின்னரான பொருளாதார நெருக்கடியான காலகட்டங்களிலும் சரி இலங்கை மக்களை கருத்திற்கொண்டு இந்தியா தன்னால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்திருக்கிறது.

இலங்கையில் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு குறித்து பேசப்படுகிறது. இந்தியாவின் நீண்டகால நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணிலுடனான சந்திப்பின் பின்னர் எமது பிரதமர் இந்தியாவில் செய்தியாளர்களிடம் பேசும்போது தெளிவுபடுத்தினார். இலங்கையில் ஆட்சியாளர்கள் பலர் மாறினாலும் நாங்கள் ஆட்சியாளர்களை பார்த்து உதவுவதில்லை. இலங்கையுடனான பாரதத்தின் நட்பு நீண்ட வரலாறு கொண்டது. கலாசார ரீதியாக இரண்டு நாடுகளும் மிகவும் நெருக்கமானவை.

தமிழர்களுக்கு மாகாண சபை மூலமான அதிகாரப் பகிர்வு இந்தியா முன்வைத்த யோசனை. அது தொடர்பில் இப்போது பேச்சுகள் நடக்கின்றன. பொலிஸ் அதிகாரங்கள் பகிர்வு குறித்தும் பேசப்படுகிறது. இலங்கையின் அரசியலமைப்பின் பிரகாரம் கருமங்கள் ஆற்றப்படவேண்டும். அவை மக்களின் அங்கீகாரத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த இரண்டு விடயங்களில் எம்மால் அநாவசிய தலையீடுகளை செய்ய முடியாது. மாகாண சபை முறைமை ஏற்கனவே உள்ளது. இப்போது மீண்டும் அந்த தேர்தலை நாங்கள் வலியுறுத்தியுள்ளோம். அதிகாரங்களை பகிர்வது தொடர்பில் பேச்சுகள் படிப்படியாக நடத்தப்பட வேண்டும். ஒரே இரவில் தீர்வுகளை எதிர்பார்த்துவிடமுடியாது. எனவே அப்படியான பேச்சுகள் நடத்தப்பட்டு தமிழ் மக்களின் அபிலாஷைகள், தமிழ் பேசும் சமூகங்களின் அபிலாஷைகள் தீர்த்துவைக்கப்படுமென இந்தியா உறுதியாக நம்புகிறது.

ஜனாதிபதி ரணில் இந்தியாவில் எமது பிரதமருடன் முக்கிய விடயங்களை பேசியுள்ளார். இலங்கையின் எரிபொருள், போக்குவரத்து, துறைமுகம், மின்சாரம், வீடமைப்பு, கல்வி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு இந்தியா தன்னால் இயன்ற உதவிகளை செய்யத் தயாராகவே இருக்கிறது. எந்தவித எதிர்பார்ப்புகளுமின்றி இந்தியா உதவுவதால்தான் எங்கள் நாடுகளுக்கிடையேயான நட்புறவு காலம் காலமாக தொடர்ந்துகொண்டிருக்கிறது. இந்தியாவின் முதலீடுகள் இலங்கையில் மேலும் அதிகரிக்கும் நிலைமையே காணப்படுகிறது. அதனால் இலங்கையின் பொருளாதாரம் மென்மேலும் உயரும். இந்திய ரூபா புழக்கம் நடைமுறையில் வரும்போது சுற்றுலாத்துறையில், நிதிச்சந்தை துறையில் அது மேலும் வளர்ச்சியை தரும். யாழ்ப்பாணத்துக்கான கப்பல் போக்குவரத்துக்கான ஆரம்பகட்ட வேலைகள் தொடங்கப்பட்டு விட்டன. மலையகத்துக்கும் வீடமைப்புக்காக எங்களது உதவிகள் தொடரும்.

இலங்கையின் பொருளாதாரம் சரிந்திருந்தபோது எமது பிரதமர் மோடி வெளிநாடுகளில் பேசும்போதெல்லாம் இலங்கைக்கு கேட்டிருந்ததை இங்கு நினைவுகூர வேண்டும். எமது வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கரும் எமது நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் இதேபோன்று தங்களால் இயன்றளவு இலங்கை பிரச்சினையை அப்போது உலகத்திடம் கூறினார்கள். இலங்கையர்களை துயரத்தில் விட்டுவிட்டு அதனை வேடிக்கை பார்க்கும் கொள்கை இந்தியாவிடம் இல்லை. சீனாவின் ஆதிக்கம் குறித்து கேட்கிறீர்கள். நிச்சயமாக எங்கள் தேசத்தின் நலன்களை, பிராந்திய பாதுகாப்பை கவனிக்கவேண்டிய தேவை எங்களுக்கு இருக்கிறது. அதில் சமரசம் செய்து கொள்ள முடியாது என்றார் உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே.

## ஊடகர் தரிந்து...

கைது செய்யப்பட்ட இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் தரிந்து உடுவரகெதர சனிக்கிழமை மாலை பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சட்டவிரோத கூட்டமொன்றில் கலந்துகொண்டமை, அரச ஊழியருக்கு அழுத்தம் விடுத்தமை உள்ளிட்ட குற்றவியல் குற்றச்சாட்டுகளின் கீழ் தரிந்து உடுவரகெதர கடந்த வெள்ளிக்கிழமை (28) கைது செய்யப்பட்டார்.

இதனை தொடர்ந்து அவர் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் பரிந்துரையின் அடிப்படையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த தரிந்து உடுவரகெதரவை பார்வையிடுவதற்கு புதுக்கடை பதில் நீதவான் பிரசன்ன அல்விஸ் சனிக்கிழமை பிற்பகல் அங்கு சென்றிருந்தார். இதன்போதே, தரிந்து உடுவரகெதர பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதேவேளை, ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர கைது செய்யப்பட்டமை மற்றும் தாக்கப்பட்டமைக்கு உள்நாட்டு, வெளிநாட்டு ஊடக அமைப்புகள் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

அச்சமின்றி செய்திகளை அறிக்கையிடுதலுக்கு உள்ள உரிமை தொடர்பில் 1981ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்ட ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் அமைப்பினரும் இந்த தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் அமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

## நிலமும்...

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் - திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சிலர் பதின்மூன்றாவது திருத்தம் வேண்டாம், பதின்மூன்றை கேட்பவர்கள் துரோகிகள் என தொடர்ச்சியாக கூறிக்கொண்டு வருகிறார்கள்.

அவர்கள் கூறும்போது நானும் பதின்மூன்றை வேண்டாம் எனக் கூறிவந்த நிலையில் தற்போது பதின்மூன்றை வேண்டும் எனக் கூறுகின்றேன் எனக் கூறுகிறார்கள்.

நாங்கள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான ஆரம்பப் புள்ளியாக பதின்மூன்றை ஏற்றுக்கொண்டோமே அல்லாமல் தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வாக இன்றும் பதின்மூன்றை ஏற்கவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் எமக்கு வழங்கப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாது விட்டால் தமிழ் மக்களின் இருப்புக் கூட கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

### காணிகள் பறிபோனபின் சமஷ்டி யாருக்கு?

வடக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள், தொல்லியல் மற்றும் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் அபகரிக்கப்பட்டு வருவதுடன் நிலத்தினிவுகளை பெரும்பான்மையினர் வாழும் மாகாணங்களுடன் இணைக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

அதுமட்டுமல்லாது, மகாவலி என்ற போர்வையில் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களில் சிங்கள குடியேற்றங்கள் நிறுவப்பட்டு வரும் நிலையில் அதனை தடுப்பதற்கு 13ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்ட காணி அதிகாரத்தை பயன்படுத்த முடியும்.

மேலும், தமிழ் மக்கள் மற்றும் தமிழ் புத்திஜீவிகள் துறை சார்ந்த நிபுணர்கள் எனப் பலரும் நாட்டை விட்டுத் தொடர்ச்சியாக வெளிநாடுகள் சென்று கொண்டிருக்கும் நிலையில் தமிழ் இன விகிதாசாரம் வெகுவாகக் குறைந்து வருகிறது.

இவ்வாறான ஒரு நிலையில் பதின்மூன்று வேண்டாம் சமஷ்டி தான் வேணும் என கேட்பவர்கள் இவ்வளவு விடயங்களும் நடந்து முடிந்த பின்னர் சமஷ்டியை பெற்று என்ன செய்யப் போகிறார்கள்.

ஒரு இனத்தின் அடையாளத்தை தக்க வைத்துக் கொள்வதற்கு நிலப்பரப்பு அவசியம் நிலங்களை இழந்து எமது அடையாளங்களை காக்க முடியாது.

### ஜனாதிபதியுடன் சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை அண்மையில் சந்தித்து கலந்துரையாடிய நிலையில் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கூறினோம்.

இறுதியாக இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் தமிழ் கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்த ஜனாதிபதி பெரும்பான்மை இன கட்சிகளைச் சேர்ந்த கட்சியின் தலைவர்களையும் மாநாட்டுக்காக அழைத்திருந்தார்.

பதின்மூன்று தொடர்பில் கலாநிதி கந்தையா விக்னேஸ்வரன் தயாரித்த வரைவு ஒன்றை ஏற்கனவே ஜனாதிபதியிடம் நாம் கையளித்துள்ள நிலையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கட்சிகளின் தலைவர்களை ஏன் ஜனாதிபதி எம்முடன் அழைத்தார் எனச் சிந்தித்தேன்.

ஒருவேளை பதின்மூன்றைக் குழப்புவதற்காக அழைத்தாரோ என சிந்தித்தபோது நடைபெற்ற மாநாட்டில் சிலரை தவிர பெரும்பாலானோர் பதின்மூன்று தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டை கொண்டிருந்தனர்.

### குழப்பிய சுமந்திரன்

பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு முன்னர் கூறிய சுமந்திரன் இறுதியாக இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் 13ஐ நடைமுறைப்படுத்துவதை விடுத்து மாகாண சபை தேர்தலை உடனடியாக வைக்குமாறு கூறினார். அதற்கு ஜி.எல்.பீரிஸ் ஆதரவாக பேசினார்.

### கோபமடைந்த ஜனாதிபதி

சுமந்திரனுடைய கருத்தினால் கோபமடைந்த ஜனாதிபதி ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு கருத்தைக் கூற வேண்டாம். முதலில் பதின்மூன்றை நடைமுறைப்படுத்துமாறு கூறினீர்கள். தற்போது தேர்தலை கேட்கிறீர்கள். முதலில் உங்களின் நிலைப்பாட்டை சரியாக அறிந்து வாருங்கள் என கூறினார்.

அன்று இரவு எனக்கு தொலைபேசியில் அழைப்பெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சுமந்திரன் தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்கிறார், உங்களின் நிலைப்பாடு என்ன, நாங்கள் கலந்துரையாடல்களை தொடர்ந்து நடத்துவதா இல்லையா எனக் கேட்டார்.

சுமந்திரன் கருத்தை சாதகமாக வைத்து குழப்ப வேண்டாம். சுமந்திரனுடைய கருத்தை சாதகமாக பயன்படுத்தி பதின்மூன்றை நடைமுறைப்படுத்தும் விடயங்களில் இருந்து நழுவக் கூடாது என தெரிவித்தேன்.

பதின்மூன்றை நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவை கோரிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உடல்நல குறைவு காரணமாகவே கூட்டத்தில் சுமந்திரன் பங்குபற்றியுள்ளார். அவரின் கருத்தை சாட்டாக வைத்து 13ஐ நடைமுறைப்படுத்துவதில் இருந்து தாங்கள் விலகிக்கொள்ள பார்க்கிறீர்களா என ஜனாதிபதியிடம் கேட்டேன்.

அதற்கு அவர், அவ்வாறில்லை. பதின்மூன்று தொடர்பில் எமது கலந்துரையாடல்களை முன்னோக்கி கொண்டு செல்வோம். நாங்கள் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வுக்கு முன்னர் பேசுவோம் என்றார்.

ஆகவே, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பெற்றுக் கொள்வதற்கு தமிழ் மக்களின் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கு அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தை தமிழ் கட்சிகள் ஓரணியில் நின்று நடைமுறைப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மலையக எழுச்சிப்...

ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அங்கு சென்று ஆசி வழங்கிய நிலையில், மன்னார் நகர் நோக்கி அவர்களின் எழுச்சி நடைபயணம் ஆரம்பமானது.

காலை 11 மணியளவில் மன்னார் நகரை வந்தடைந்து மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தை சென்றடைந்தனர்.

இதன்போது மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் மற்றும் பணியாளர்கள் இணைந்து வரவேற்றனர்.

இன்று திங்கட்கிழமை (31) காலை 6.30 மணியளவில் மன்னாரில் இருந்து நான்காவது நாள் பயணமாக முருங்கன் நோக்கி பயணிக்க உள்ளனர்.

மலையக மக்களின் 200 வருட கால வரலாற்றை நினைவுகூரும் வகையிலும் மலையக மக்களின் மாண்பை பறைசாற்றும் விதமாகவும் 'வேர்களை மீட்டு உரிமை வென்றிட' என்ற தொனிப்பொருளில் மலையக எழுச்சிப் பயணம் என்ற மகுடத்தில் மாண்புமிகு மலையக மக்கள் கூட்டிணைவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 16 நாள் தொடர் நடைபயணத்தின் ஆரம்ப நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை (28) தலைமன்னாரில் அமைந்துள்ள புனித லோரன்ஸ் திருத்தலம் முன்பு நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக இரண்டாம் நாளான நேற்று சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் தலைமன்னார் புனித லோரன்ஸ் திருத்தலத்தில் இருந்து ஆரம்பமான நடைபயணம், காலை 11 மணியளவில் பேசாலை வெற்றிநாயகி தேவாலயத்தை வந்தடைந்தது.

மலையக மக்கள், மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், ஏனைய சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமன்னார் மற்றும் பேசாலை நகரை அண்மித்து வாழும் மக்களின் பங்கேற்புடன் வெற்றிநாயகி தேவாலயத்தை வந்தடைந்த பேரணியை அத் தேவாலயத்தின் அருட்தந்தை வரவேற்றதோடு அதனைத் தொடர்ந்து வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை (30) காலை 6.30 மணியளவில் மீண்டும் பேசாலை வெற்றிநாயகி தேவாலயத்துக்கு அண்மையில் இருந்து ஆரம்பமாகிய நடைபயணம் மன்னார் நகரை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய ஜனநாயக மாக்சிய லெனினிச கட்சியின் 45ஆவது ஆண்டு விழா



ஆ.ரமேஸ்

புதிய ஜனநாயக மாக்சிய லெனினிச கட்சியின் 45ஆவது ஆண்டு விழாவும் பொதுக் கூட்டமும் மாத்தளை நகர சபை மண்டபத்தில் (30) காலை இடம்பெற்றது.

இந்த நாட்டின் இடதுசாரி இயக்க வரலாற்றில் சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சி அதிகாரத்தின் அடக்குமுறைக்கும் ஏகாதிபத்திய அதிகார அடக்குமுறைக்கும் மத்தியில் தேசிய இனங்களின் விடுதலைக்கு உழைக்கும் கட்சியாக புதிய ஜனநாயக மாக்சிய லெனினிச கட்சி திகழ்கின்றது.

மேலும் மக்களின் அதிகாரத்தை முன்னிறுத்தி கடந்த 45 ஆண்டுகளாக வெகுஜன அரசியலை புதிய ஜனநாயக மாக்சிய லெனினிச கட்சி முன்னெடுத்து வருகின்றது.

இக் கூட்டத்தில் தலைமை உரையை தோழர் ச.பன்னீர் செல்வம் நிகழ்த்தியதுடன் தோழர் ஜோதிராஜ் ஜெகன் புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி சார்பில் உரையாற்றினார்.

இந்நிகழ்வில் சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு செப் மோகன் ,வன்னி மாவட்ட செயலாளர் நீ.பிரதீபன், வடபிராந்திய செயலாளர் க.தணிகாசலம் ,கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல்,தேசிய அமைப்பாளர் வெ.மகேந்திரன்,மலையக பிராந்திய செயலாளர்.டேவிட் சுரேன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

# வடமாகாணம் தமிழர்களின் மாகாணமாவென கேட்கும் நிலை விரைவில் உருவாகும்

## யாழ்ப்பாண பல்கலைக்கழக வேந்தர் தெரிவிப்பு



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பெரும்பாலான பீடங்கள் பெரும்பான்மை இனத்தவர்களின் கைகளுக்குச் சென்றுள்ள நிலையில் ஐந்து வருடங்கள் சென்றால் வடக்கு மாகாணம் தமிழர்களின் மாகாணம் எனக் கூறும் நிலை மாறிவிடும் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியரும் வேந்தருமான பத்மநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள பிரபல தனியார் விருந்தினர் விடுதியில் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கலைப்பீடத்தை தவிர ஏனைய பீடங்கள் பெரும்பான்மையானவர்களுடையதாக மாறியது போல் வடக்கு மாகாணமும் தமிழர்களின் தனித்துவமான அடையாளத்தில் இருந்து மாறக்கூடிய வகையில் ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

தமிழ் மக்களுடைய மொழி ,கலாசாரம்,பண்பாடு ஆகியன பாதுகாக்கப்பட வேண்டுமானால் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

அதனைப் பாதுகாப்பதற்கு 13ஆவது திருத்தத்தில் உள்ள பறிக்கப்பட்ட பல அதிகாரங்களை மீளப்பெற்று நடைமுறைப் படுத்த வேண்டும். அதனூடாக எமது இருப்பை ஓரளவு நிலை நாட்ட முடியும்.

நான் அரசியல்வாதியாகவோ அல்லது அரசியல் கட்சியின் பிரதிநிதியாகவோ எனது செயற்பாடுகளை என்றைக்கும் மேற்கொண்ட தில்லை. ஆனாலும் எனக்கு பத்துக்கும் மேற்பட்ட விருதுகளை தந்துள்ளார்கள்.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நீண்ட வரலாறு உண்டு. தமிழ்த் தலைவர்கள் உரிய நேரத்தில் கேட்கவேண்டியவற்றை கேட்காமையின் காரணமாகவே இலங்கையில் இனப் பிரச்சினை உருவெடுத்தது.

இராமநாதன் தொடக்கம், 50:50 திட்டத்தை முன்வைத்த காலம் வரையான தலைவர்கள் கொழும்பை மையமாகக் கொண்டு வடக்கு கிழக்கு தமிழர்களின் பிரச்சினைகளை நோக்கினார்கள்.

கிழக்கு மாகாணம் மூன்று சமூகங்களின் பிரதேசமாகவுள்ளது. அதிலும் குறிப்பாக முஸ்லிம் சமூகம் தமிழ் சமூகத்திலும் பார்க்க கூடுதலாக காணப்படுகின்றனர். திருகோணமலையில் பெருந்தொகையான தமிழர்கள் முஸ்லிம்களாக மாறிவிட்டார்கள்.

ஏனெனில் தமிழர்களை கவனிப்பார்கள் இல்லை. அவர்களை கவனிப்பதற்கு அதிகாரமும் இல்லை.எமக்கான அதிகாரங்களை பெற்றுக்கொண்டால் நிலங்களையும் கடல் வளங்களையும் பயன்படுத்தி பொருளாதாரத்தில் பலமடையமுடிவதோடு தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்கிக்கொள்ள முடியும்.

எனவே உரிய முறையில் மாகாண சபை அதிகாரங்களை நடைமுறைப்படுத்த எல்லா கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும். அத்துடன் கல்வியியலாளர்கள், பொதுமக்கள் ஆகியோரும் ஆதரவு வழங்க வேண்டும்.

மாகாணசபை முறைமை தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வல்ல. காலா காலம் இலங்கை ஜனாதிபதிகள் ஒவ்வொரு தீர்வு முறைமைகளையும் முன்வைத்தனர். எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் இறுதித் தீர்வை முன்நிபந்தனையாக வைத்தால் சிங்கள ஆட்சியாளர்கள் ஒற்றையாட்சியையே வலியுறுத்துவார்கள்.

5வருடங்கள் சென்றால் வடக்கு மாகாணம் தமிழர்களின் மாகாணம் என்று கூறும் நிலை மாறிவிடும். அதற்கு பின் எந்த அதிகாரத்தை கேட்க முடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எப்படி கலைப்பீடத்தை தவிர ஏனைய பீடங்கள் பெரும்பான்மையானவர்களுடையதாக மாறியதோ அது போல் வடக்கு மாகாணமும் மாற்றமடையும்.

தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் தமது சமுதாயத்தின் அபிலாசைகளையும் அவர்களது இருப்பைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். இதுவே அரசியல் தலைவர்களின் கடமையாகும் எனவும் தெரிவித்தார்.

# நெடுந்தீவுக்கு விஜயம் செய்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க

பு.கஜிந்தன்

புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.



நெடுந்தீவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காகவே அமைச்சர் அங்கு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நூலக அபிவிருத்தி மற்றும் மொழி இலக்கிய கலை மேம்பாட்டுத்திட்டத்தை அமைச்சர் விதுர விக்கிரமசிங்க ஆரம்பித்து வைத்தார்.

# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆடி மாதம் 15ம் நாள்**
**வெள்ளிக்கிழமை**

**மேஷம்:** நினைத்த காரிய வெற்றி. சுபசெய்தியால் மகிழ்ச்சி. ஆலய தரிசனத்தால் மன அமைதி.

**ரிஷபம்:** எதற்கும் மௌனம் காப்பது நல்லது.அவசர முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

**மிதுனம்:** காதல் நிறைவேறும். பயணங்கள், சுற்றுலாக்கள் அமையும். பெண்களால் லாபம்.

**கடகம்:** கோபதாபங்கள், எரிச்சல், டென்ஷன், வீண் விரயங்கள், மறதி, நஷ்டங்கள் உண்டு.

**சிம்மம்:** ஆன்மீக பயன்கள், தெய்வபக்தி ஏற்படும். நல்ல எண்ணங்கள் தெளிந்த மனதுடன் நடைபோடுவீர்கள்.

**கன்னி:** நினைத்த பயணங்கள் அமையும். மனமகிழ்ச்சி, உற்சாகம், மற்றும் தாய் வழி ஆதரவு உண்டு.

**துலாம்:** சமயோசிதமாக புத்தியுடன் செயலாற்றுவீர்கள். சகோதர ஆதரவு உண்டு.

**விருச்சிகம்:** பணவரவுக்கான வாய்ப்புண்டு. பேச்சில் நளினம் இருக்கும். கவிஞர்களுக்கு கற்பனை வளம் மிகும்.

**தனுசு:** மனதில் எண்ணற்ற சிந்தனைகள் அதிகரிக்கும். ஞாபக மறதியால் நட்டங்கள் உண்டாகலாம்.

**மகரம்:** வீண் விரயங்கள், டென்ஷன் ஏற்படும். பண விவகாரங்களில் கவனமாக செயல்படுங்கள்.

**கும்பம்:** தொட்டதுதுலங்கும் நாள். வீட்டுக்காக பொருள் வாங்குவீர்கள். மூத்த சகோதரரால் உதவிகள் உண்டு.

**மீனம்:** பயணங்களால் உடல் அசதி ஏற்படும். குறை நிறைகளைப் பற்றி விவாதிப்பீர்கள்.

**திதி:** திரயோதசி மு.ப.7.26 வரை பின் சதுர்த்தி (வளர்)
**நட்சத்திரம் :**பூராடம் பி.ப.6.58 வரை பின் உத்திராடம்
**யோகம் :** மரண யோகம் முழுவதும்;
**வார சூலை :**மேற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம் :**மு.ப. 6.01 – 7.01 மணி வரை
**ராகுகாலம் :**10.31 – 12.01 மணி வரை
**எமகண்டம் :**3.01 - 4.31 மணி வரை
**குளிகை:** 7.31 – 9.01 மணி வரை
**சந்திராஷ்டமம்:** இடப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்:** ஆயிலியம், கேட்டை,ரேவதி, அஸ்வினி, மகம், மூலம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம் :** ------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# ஜனாதிபதி ரணிலை சந்தித்த மனித உரிமைகள் ஆணைக்குழு

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடந்த 28 ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடினர். இச்சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இதுவரை சுமார் 11,000 முறைப்பாடுகள் பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பணியாளர்கள் தட்டுப்பாடு காணப்படுவதாகவும் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

அதற்குரிய தீர்வுகளை விரைவில் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதன்போது, அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்கு அவசியமான வழிகாட்டல் கோவை ஒன்றை விரைவில் பெற்றுத்தருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, அதனூடாக ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கான இயலுமை தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எல்.டீ.பி தெஹிதெனிய,ஏனைய உறுப்பினர்களான பேராசிரியர் தையமுத்து தனராஜ், பேராசிரியர் பாத்திமா பர்ஸானா ஹனீபா மற்றும் நிமலசேன கார்திய புஞ்சிஹேவா உள்ளிட்டவர்கள் இதன்போது கலந்துகொண்டனர்.

# சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்சை பெபேறுகள் வெளியாகின

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ் சைவப்புலவர் தேர்வுகளின் பெபேறுகள் வெளியிடப்பட்டுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார் .

மேற்படி பரீட்சையில் பின்வருவோர் சித்தியடைந்துள்ளனர். மூத்ததம்பி - சிவகுமாரன் (கொக்கட்டிச்சோலை), கந்தசாமி கைலைநாதன் (மானிப்பாய்), குணசிங்கம். கந்தபாலன் (கோப்பாய் ), சிவப்பிரியா ராஜ்குமார் (இனுவில்), பராபரம் துளசிரஞ்சன் (மட்டக்களப்பு), பிரம்மஸ்ரீகுமாரசாமி சர்மா சுவாமிநாதசர்மா (இணுவில்)ஆகியோரும் இளஞ்சைவப்புலவர் பரீட்சையில் மகேந்திரன் வினோக்சன் (பொலனறுவை) , அருமைநாதன் ஸதிஸ்குமார் (திருகோணமலை), கனகேந்திரன் யோகமனி (திரனியகல), நடராஜா தர்ஷிகா (பொலன்னறுவை), சுதாகரன் ஸர்காந் (களுவாஞ்சிக்குடி), செல்வி அழகேந்திரன் நிலாந்தினி (மூதூர்), செல்வி பானுப்பிரியா தில்லைமணி (வட்டுக்கோட்டை) ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர்.

# மாவனல்லையில் முஸ்லிம் மீடியா போரத்தின் கருத்தரங்கு





அஷ்ரப் ஏ. சமத்

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் நடத்திய "21 ஆம் நூற்றாண்டில் ஊடகம்" எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு கடந்த (29) சனிக்கிழமை மாவனெல்லை பதுரிய்யா மத்திய கல்லூரியில் நடைபெற்றது

போரத்தின் தலைவர் என்.எம்.அமீன், பதுரிய்யா மத்திய கல்லூரி அதிபர் ஏ.எல்.ஏ. ரஹ்மான் ஆகியோரின் இணைத் தலைமையில் இரு அமர்வுகளாக இடம்பெற்ற கருத்தரங்கில் கலாநிதி எம்.சி.ரஸ்மின், தாஹா முஸம்மில், ஜாவித் முனவ்வர், அஷ்ரப் ஏ. சமட் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் முஹம்மத் ஆரிபுல் இஸ்லாம் ,அவரது பாரியார், பேராதனைப் பல்கலைக்கழக இஸ்லாமிய அரபு கற்கைத் துறையின் முன்னாள் தலைவர் எம்.ஐ.எம்.அமீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கொழும்பில் கௌரவிப்பு விழா



இலங்கையின் அத் தியாதுஸ் ஷாதுலியத்துல் பாசியா ஏற்பாடு செய்து நடத்திய கலீபத்துல் குலபா மொஹமட்ஸுஹுர் ஆலிமை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பு பேங்ஷோல் விதீயில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அத் தியாயத்துஷ் ஷாதுலியாதுல் பாசியாவின் தலைவர் எம். ஜைனுல் ஆப்தீன், உபதலைவர் தாசிம், செயலாளர் எம்.எச்.எம். முஸாதிக், கொழும்பு முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால் ஆகியோர் இணைந்து கலீபத்துல் குலபாவை பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

# குறைந்தபட்ச எரிபொருள் இருப்புக்களை முறையாக பேண முன்பதிவு செய்யவும்

## எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கோரிக்கை

குறைந்தபட்ச எரிபொருள் இருப்புக்களை முறையாக பேணுவதற்குத் தேவையான முன்பதிவுகளை செய்யுமாறு அனைத்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களிடமும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேநேரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் போதிய எரிபொருள் இருப்பு உள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்ற எதிர்பார்ப்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 101 எரிபொருள் நிலையங்கள் 92 ஒக்டேன் பெற்றோலையும் 61 எரிபொருள் நிலையங்கள் லங்கா ஓட்டோ டீசலையும் 50 வீதமான குறைந்தபட்ச கையிருப்பை 29 ஆம் திகதி வரையில் பராமரிக்க தவறியுள்ளதாக அமைச்சர் தனது உத்தியோகபூர்வ ட்விட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் இருப்புக்களை முறையாக பராமரிக்கத் தவறிய பல எரிபொருள் நிரப்பு நிலையங்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கும் ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் கடந்த மாதம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

30.07.2023 காலை 8.30 மணி நிலவரப்படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் உள்ள எரிபொருள் இருப்பு பின்வருமாறு.

ஓட்டோ டீசல் – 124,690 மெற்றிக் தொன், சூப்பர் டீசல் – 5,651 மெற்றிக் தொன் , 92 ரக பெற்றோல் – 19,903 மெற்றிக் தொன், 95 ரக பெற்றோல் – 4,537 மெற்றிக் தொன், விமான எரிபொருள் – 26,539 மெற்றிக் தொன்னாகும்.

# மன விரக்தியடைந்த யுவதி தற்கொலை



பட்டமளிப்பு விழாவின் பின்னர் வீடு தீரும்பிய யுவதி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். இந்த சம்பவமானது 28ஆம் திகதி வட்டுக்கோட்டை,சுழிபுரம் மத்தி பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இது குறித்து தெரிய வருவதாவது,

குறித்த யுவதி சப்ரமுகவ பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வந்த நிலையில் 27ஆம் திகதி பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இந்நிலையில் பட்டமளிப்பு விழா முடிந்து பெற்றோருடன் அவர் சுழிபுரத்தில் உள்ள வீட்டுக்கு வந்தார்.இந்நிலையில் சம்பவ தினம் தந்தை வெளியில் சென்ற வேளை தாயார் வீட்டு வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். இதன்போது குறித்த யுவதி தூக்கில் தொங்கியுள்ளார். இதனை அவதானித்த தாயார் அவரை மீட்டு சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவம் குறித்து மரண விசாரணைகளை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் உடற்கூற்று பரிசோதனைக்காக சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்.

உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சுழிபுரம் மத்தி பகுதியைச் சேர்ந்த சற்குணரத்தினம் கௌசி (வயது 26) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தாய் மற்றும் தந்தை ஆகியோர் இருவரும் தங்களுக்குள் தொடர்ந்து முரண்பட்டு வரும் நிலையில் மன விரக்தியடைந்த யுவதி உயிரை மாய்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவமானது அப்பகுதி மக்களை மிகுந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஜூலை 31ஆம் திகதி, திங்கட்கிழமை

# உலகில் உணவுப்பஞ்சம் ஏற்படும் அபாய நிலைமை!

ரஷ்யாவில் ஆளில்லா விமானம் மூலம் நடத்தப்பட்ட தாக்குதல் உலக அரங்கில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

உக்ரைன் நடத்திய இந்தத் தாக்குதலால் மொஸ்கோவில் விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலால் ஆத்திரமடைந்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், இனி ஐரோப்பா முழுவதும் பட்டினியால் உயிரிழக்கும் அபாயம் அதிகரிக்கும் என்று கடுமையான தொனியில் நேட்டோ தலைவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்குமிடையில் 2022ஆம் ஆண்டு பெப்ரவரி 24இல் தொடங்கிய போர் இன்னும் நீடிக்கிறது. நேட்டோவுக்கு தற்போது எச்சரிக்கை விடும் புட்டின், உக்ரைன் மீது போர் தொடுத்ததற்கும் நேட்டோவுடனான முரண்பாடுகளே காரணம் என்பது ஆச்சரியமானது. நேட்டோவில் இணைய உக்ரைன் முன்வந்ததையடுத்து ரஷ்யா போரை முன்னெடுத்தது. இந்தப் போரின் தாக்கம் உக்ரைன் நாட்டு பொருளாதாரத்திலும் மக்களின் வாழ்விலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், ரஷ்யா - உக்ரைன் இடையே போர் தொடங்கி ஓராண்டான பிறகும்கூட நேட்டோவில் உக்ரைன் இணைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், அமெரிக்கா உட்பட நேட்டோ நாடுகள் ரஷ்யாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரைனுக்கு ஆயுத உதவி, நிதியுதவி போன்றவற்றை வழங்கி வருகின்றன.

இந்த நிலையில், ஐரோப்பாவுக்கு ஏற்றுமதியாகும் தானிய விநியோகத்தை சீர்குலைக்க தனியார் ஆயுதக் குழுவான வாக்னரை அனுப்பலாம் என்று ரஷ்யா சூட்சுமமாகத் தெரிவித்திருப்பது நேட்டோவுக்கு மற்றொரு அச்சுறுத்தலாகப் பார்க்கப்படுகிறது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் மொஸ்கோ மீது உக்ரைன் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலால் மிகவும் கோபமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஐரோப்பாவின் தானிய விநியோகத்தை சீர்குலைக்க ரஷ்யா இப்போது தனது தனியார் இராணுவமான வாக்னரை அனுப்பலாம் என்று செய்திகள் வருகின்றன.

உக்ரேனிய ஆளில்லா விமானங்கள் இரவில் மொஸ்கோவை தாக்கியதில் இரண்டு அரச கட்டடங்கள் சேதமடைந்தன. இந்தத் தாக்குதலுக்கு முன்னதாக ரஷ்யா ருமேனியாவில் ட்ரோன் தாக்குதலை நடத்தியது. அதில் தானியக் கிடங்குகள் குறிவைக்கப்பட்டன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஐரோப்பாவுக்கு தானியம் அனுப்பும் இடங்களை ரஷ்யா குறிவைத்து தாக்கினால் ஐரோப்பாவில் உணவுச் சிக்கல் அதிகரிக்கும்.அங்கு ஏற்படும் உணவுத் தேவை அதிகரிப்பு உலகின் உணவுத் தேவையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ரஷ்யாவின் தனியார் இராணுவமான வாக்னர், ஆபிரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் தீவிரமாக செயற்பட்டு வருகிறது. அத்தகைய சூழ்நிலையில், ஐரோப்பிய நாடுகளின் தானியக் கடைகள் அழிக்கப்பட்டால் ஐரோப்பாவில் தானிய நெருக்கடியால் பட்டினியின் ஆபத்து அதிகரிக்கலாம்.

அதிக விளைச்சல் தரும் கோதுமை மற்றும் பிற தானியங்கள் உற்பத்திக்கு பெயர் பெற்ற கருங்கடலின் சுற்றியுள்ள பகுதியின் ஏற்றுமதியை ஏலவே ரஷ்யாவின் உக்ரைன் மீதான தாக்குதல் பாதித்தது. ரஷ்யா-உக்ரைன் மோதல் உலகெங்கிலும் உள்ள உக்ரைன் துறைமுகங்களில் இருந்து தானியங்களைக் கொண்டுசெல்வதில் தடையை ஏற்படுத்தியது.

கூடுதலாக, ரஷ்யா தனது தானிய ஏற்றுமதியை தற்காலிகமாக நிறுத்தி, நிலைமையை மேலும் மோசமாக்கியது. இதன் விளைவாக உலக உணவுப் பொருட்களின் விலை உயர்வு மற்றும் குறைந்த வருமானம் உள்ள நாடுகளில் பஞ்சம் ஏற்படும் அச்சுறுத்தல் ஏற்பட்டது.மேலும் ரஷ்யா உணவுப் பொருட்களை ஆயுதமாக்குகிறது என்ற குற்றச்சாட்டுகளும் எழுந்தன.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க கருங்கடலில் இருந்து கடல் வழிகளைக் கட்டுப்படுத்தும் துருக்கியின் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு முடிவில் கருங்கடல் தானிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

ரஷ்யாவும் உக்ரைனும் ஜூலை 2022 இல் இஸ்தான்புல்லில் இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டன. ஐக்கிய நாடுகள் சபையுடன் கையெழுத்திடப்பட்ட இந்த ஒப்பந்தத்தின்படி கருங்கடல் துறைமுகங்களில் இருந்து உக்ரேனிய தானியங்கள் மற்றும் பிற விவசாய பொருட்களை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம் முதலில் நான்கு மாதங்களுக்கு அமுலில் இருந்தது. நவம்பர் 2022 நடுப்பகுதியில் இது மார்ச் 18, 2023 வரை 120 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது. அதற்கு இன்னொரு நீடிப்பு கிடைத்தது. இதனால் ரஷ்யா கோபமடைந்தது. எனவே ஜூலையில் ரஷ்யா இந்த ஒப்பந்தத்தில் இருந்து விலகியது.

இம்மாத ஆரம்பத்தில் இருந்து ரஷ்யா ஆக்ரோஷமாக உள்ளது. கருங்கடல் தானிய ஒப்பந்தத்தில் இருந்து ரஷ்யா இந்த மாதம் விலகிக் கொண்டது. இதற்கு முன்னதாக மே 17 அன்று, ரஷ்யா இந்த ஒப்பந்தத்தை 60 நாட்களுக்கு நீடிக்க ஒப்புக்கொண்டது. இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியின் காரணமாக அதிருப்தி அடைந்த நிலையில், ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக சில தினங்களுக்கு முன்னர் தனது முடிவை ரஷ்யா அறிவித்தது. கருங்கடல் தானிய ஒப்பந்தத்தில் இருந்து ரஷ்யா பின்வாங்கியமை சர்வதேச அளவில் கவலைகளை அதிகரித்தது.

இந்த நிலைமையில் கோதுமை மா ஏற்றுமதியில் புதிய கட்டுப்பாடுகளை ரஷ்யா விதித்தால் இலங்கை போன்ற பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நாடுகளுக்கு அது பெரும் பாதிப்பைத் தரும்.உலகின் நிலைமைகளை கருத்திற்கொண்டு இந்த விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும் இலங்கை அரசு.

## இன்றைய நாளில்...

- 781 – பூஜி எரிமலையின் பதிவு செய்யப்பட்ட முதல் சீற்றம் இடம்பெற்றது.
- 1658 – ஔரங்கசீப் இந்தியாவின் முகலாயப் பேரரசராக முடிசூடினார்.
- 1805 – இந்திய விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிரித்தானியரால் தூக்கிலிடப்பட்டார்.
- 1948 – இலண்டன், 1948 ஒலிம்பிக் போட்டிகளில் 400 மீ தடை ஓட்டப்போட்டியில் இலங்கையைச் சேர்ந்த டங்கன் உவைட் வெள்ளிப் பதக்கம் பெற்று சாதனை படைத்தார்.
- 1964 – சந்திரனின் மிக அருகில் எடுக்கப்பட்ட படங்களை ரேஞ்சர் 7 விண்கலம் பூமிக்கு அனுப்பியது.
- 1971 – அப்பல்லோ 15 விண்வெளி வீரர்கள் லூனார் தரையுலவியை சந்திரனில் செலுத்தி சாதனை புரிந்தனர்.
- 1999 – நிலாவில் உறைநீரைப் பற்றி ஆராய்வதற்காக சென்ற நாசாவின் டிஸ்கவரி விண்கலம் நிலாவின் தரையுடன் மோத வைக்கப்படது.
- 2006 – பிடெல் காஸ்ட்ரோ தனது அதிகாரத்தைத் தனது சகோதரர் ராவுல் காஸ்ட்ரோவிடம் ஒப்படைத்தார்.
- 2006 – ஈழப்போர்: திருகோணமலையில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் 19 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.



# இராஜதந்திர பிராந்திய மூலோபாய தத்துவங்களுக்குள் சிக்கித்தவிக்கிறோம்

## கரவெட்டியில் மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவிப்பு



**தமிழினத் தலைவர்களுள் ஒருவரான அமரர் மு.சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு விழா கடந்த வாரம் கரவெட்டியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. ஆற்றிய உரை**

அண்ணன் சிவா என்கின்ற ஆலமரம்,ஓர் அற்புதமான ஆளுமை. அவர் பாராளுமன்றம் நுழைந்த 1960 ஆம் ஆண்டில் நம் நாட்டு மண்ணில் பிறந்த அடியேனுக்கு இங்கு உரையாற்றும் இந்த அரிய வாய்ப்பு கிடைக்கப் பெற்றதையிட்டு புளகாங்கிதம் அடைவதைத்தவிர வேறு எந்தப் பேறு நான் பெறமுடியும்.

அவருடைய சகவாசத்தினால் நாங்கள் அனுபவித்த சுகனுபவம் என்பது சாதாரண விடயமல்ல.அவரை வெறும் வார்த்தைகளுக்குள் அடக்கிவிட முடியாத அரும்பெரும் தலைவர் என்று நான் சொல்லித்தான் நீங்கள் அறியவேண்டிய அவசியமில்லை.

உடுப்பிட்டிச் சிங்கமான மேடை அதிரப் பேசுகின்ற மேதாவிலாசம் வாய்க்கப்பெற்ற அந்தப் பெருமகனார் 1960 ஆம் ஆண்டு பாராளுமன்றம் நுழைந்து அடுத்த வருடமே யாழ்ப்பாண கச்சேரி முன்னால் தமிழரசுக் கட்சியினர் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தியபோது தான் ஒரு காங்கிரஸ்காரராக இருந்த நிலையிலும் அன்று எதிரும் புதிருமாக அரசியல் செய்த அந்த அற்புத ஆளுமை தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் மூன்றுமாத காலம் முன்கொண்டு சென்ற அந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டு தமிழ் அரசியலின் சமரச விருப்பத்துக்கு தன்னை முதலிலே அடையாளம் காட்டிய பெருமகனாவார்.

அவருடைய ஐந்து தசாப்த கால அரசியல் வாழ்வு இவ்வளவு பெரிய முன்னுதாரணங்களை எங்களுக்கு தந்திருக்கிறது என்று நினைக்கின்ற போது அண்ணன் சிவா என்கிற இந்தப் பெரிய ஆலமரம், இந்த விருட்சம் இவருடைய தார்மீகப் பண்புகள் இவற்றையெல்லாம் பட்டியல் போடப்போனால் இன்று பேசுவதற்கு நேரம் போதாமல் போகும்.

எந்தப் போராளிகளுக்காக அண்ணன் சிவா தன்னுடைய வாதத்திறமையை நீதி மன்றங்களிலும் வழக்காடு மன்றங்களிலும் வேறு பல இடங்களிலும் பொது மேடைகளிலும் முழங்கித் திரிந்தாரோ அதே போராளிகளின் துப்பாக்கி ரவைகள் அவரையும் பலிகொள்ள இருந்த ஒரு சந்தர்ப்பத்தில் தெய்வாதீனமாக உயிர்தப்பி அந்த விழுப்புண்களைத் தாங்கிய ஒரு வீர மகனாக அவரை இறுதியில் அதே இயக்கம் ஒரு விடுதலை வீரராக அங்கீகரித்தது மாத்திரமல்ல, 2001 ஆம் ஆண்டு அந்த இயக்கத்தின் மேற்பார்வையில் இன்று கரவெட்டி அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் தமிழ்த் தலைவர்கள் கேட்டு நிற்கின்ற அதே ஒற்றுமையை பலவந்தமாக ஏற்படுத்தி அது தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக உருவெடுத்த போது அந்தக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் அந்தஸ்துக்கு தகுதியுள்ள ஒருவராக அதே இயக்கம் அவரை அடையாளப்படுத்தி பாராளுமன்றத்துக்கு அனுப்பியது.அப்போது, அவர் சக்கர நாற்காலியிலே வந்து ஒரு கட்சித் தலைவராக முன்வரிசையில் அமரவேண்டிய அந்தஸ்து இருந்த போதிலும் பின்வரிசை ஆசனமொன்றில் அமர்ந்து அவர் பேசிய போது முழு அவையும் அதிர்ந்துபோன அவருடைய கர்ஜிக்கின்ற குரல் வாண்மையை அன்றைய ஆட்சியை அமைத்தவர்களில் ஒருவராக நானும் முன்வரிசை ஆசனங்களில் அமைச்சராக இருந்த போது அனுபவிக்கக் கிடைத்தது என்கிற அந்த ஆனந்தம் ஒரு சாமான்யமான விடயமல்ல.

19 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு அவருடைய அந்தக் குறுகிய பாராளுமன்ற வாழ்வு ஆறேயாறு மாதங்கள் என்று நான் நினைக்கிறேன். அந்த ஆறு மாதங்களுக்குள் எப்போதாவது அபூர்வமாக அவர் பேசுகின்ற போது சபையே அதிர்வது மாத்திரமல்ல, அன்று இருந்த மிக மோசமான தெற்கின் பேரினவாதக் கும்பல்கள் எல்லாம் பாராளுமன்றத்தை ஆக்கிரமித்திருந்த சூழலிலும் அவருடைய உரைக்கு தனி மதிப்பிருந்தது என்பதை நாங்கள் கண்கூடாகக் கண்டோம்.

சட்ட ஆற்றல்மிக்க அவர் தங்கத்துரை,குட்டிமணி,ஜெகன் போன்றவர்களுக்காக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தோன்றி வாதாடியபோது நாங்களெல்லாம் இளம் சட்டத்தரணிகளாக அவருடைய வாதத்திறமையைப் பார்த்து வியந்து போனோம்.

பயங்கரவாத தடைச் சட்டத்தில் குற்றவியல் குற்ற ஒப்புதல்களையெல்லாம் சந்தேக நபர்களுக்கு எதிராக பாவிக்க முற்படுகின்றபோது , அவற்றை மிகத் திறமையாக அவர் எவ்வாறாக சாட்சிகள் கட்டளைச் சட்டத்தை,குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையை,தண்டனைச் சட்டக்கோவையை பிரிவு பிரிவாக மிக இலாவகமாக விளக்குகிற போது நாங்கள் இளம் சட்டத்தரணிகளாக அதனைப் பார்க்கும் பாக்கியம் கிட்டியதையிட்டு இன்று பெருமைப்படுகிறோம்.

அவர் சாமான்யமான தலைவரொருவரல்லர். அவருடைய பூதவுடல் கொழும்பிலிருந்து சோனப்பு மயானத்துக்கு கொண்டுவரப்பட்டபோது எந்த இயக்கம் அவருக்கு எதிராக துப்பாக்கிகளை நீட்டியதோ அதே இயக்கம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு போராளிகளின் உடல்கள் கொண்டு செல்லப்படுகிற போது கொடுக்கின்ற மரியாதையை விடவும் இரட்டிப்பு மரியாதையை கொடுத்து அவரை கௌரவப்படுத்தியது என்பதை நாங்கள் பார்க்கிறோம்.

அவர் பாராளுமன்றத்தில் இல்லாத காலங்களிலும் இந்த தமிழர் போராட்டத்தை எவர் எவரெல்லாம் கொச்சைப் படுத்தி, குறைகண்டு, அதில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்க என்று புறப்பட்டார்களோ அவர்களுக்கெல்லாம் சிம்ம சொப்பனமாக இருந்த ஒரு பெரும் தலைவரைத்தான் இங்கு நாங்கள் இழந்து தவிக்கின்றோம்.இவ்வாறாக தன்னுடைய வாதத்திறனை இன உய்வுக்காக முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டவருக்குத்தான் இன்று பிறந்த நூற்றாண்டு , அவர் பிறந்த மண்ணில் கொண்டாடப்படுகிறது.

அண்ணன் சிவா மன்னாரில் மாநாடொன்றில் கலந்து கொண்டிருந்த வேளையில் கொழும்பு, நொரிஸ் கெனல் வீதியில் இருந்த அன்னாரது வீடு தீக்கிரையாக்கப்பட்டதோடு அரிய,பெரிய நூல்களைக் கொண்ட அவரது நூலகமும் முழுமையாகத் தீக்கிரையானது. இச்சந்தர்ப்பத்தில், மதிலேறிக் குதித்து வெளியேறி ஓடிய ஓர் இளம் பெண்ணாக இருந்த அவருடைய மகளார் இந்த நிகழ்வுகளை மீட்டிப்பார்ப்பார் என நான் நினைக்கிறேன்.எப்படியான அவதியும் அவலமுமாக அந்தக்காலம் இருந்திருக்கும் என்பதை நினைக்கவே மிகவும் அச்சமாக இருக்கிறது.

அண்ணன் சிவாவுடைய வீட்டுக்கு என்னுடைய மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் புனர்வாழ்வு அமைச்சராக இருந்த போது பல இலட்சக்கணக்கான ரூபாக்களுக்கு ஒரு காசோலை எழுதி நஷ்ட ஈடாகக் கொண்டு சென்றபோது, "தம்பி என்னுடைய சமூகத்தில் அனைவருக்கும் இழப்பீடு கிடைக்கும் வரை நான் இதை எடுப்பது நல்லதல்ல" என்று கூறி,ஒதுங்கிவிட்ட பெருமகனார் அண்ணன் சிவா.

இதே அண்ணன் சிவா, கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் குடியேறியிருந்த " யாழ் மண்ணில் இருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்கள் அனைவரும் மீளக்குடியேறும் வரை அந்த மண்ணை மிதிக்கமாட்டேன்" என்று எடுத்த சபதம் எங்களையெல்லாம் அவரின் சொற்களால் வசீகரித்துவிட்ட வசனங்களாக இன்று நெடுநாளும் பேசப்படுகிற விடயமாக இருந்து வருகிறது. அதனை தன்னுடைய கடைசி மூச்சுவரை கடைப்பிடித்த ஒரு தலைவருக்குத்தான் இன்று இங்கு இந்த விழா எடுக்கப்பட்டுள்ளது.

அவரைப்பற்றி ஒரு சிரேஷ்ட ஆங்கில பத்திரிகையாளர்,அவர் பிரதி சபாநாயகராக இருந்தபோது , "The Deputy Speaker of Ceylon is living like a hermit in a Cottage" (இலங்கையின் பிரதி சபாநாயகர் துறவியொருவரைப்போல, ஒரு முனிவரைப் போல குடிசையில் வாழ்கிறார்)என்று அவரைப்பற்றி சொன்னதைப் பார்க்கிறபோது, இந்த தன்னலம் கருதாத தனிப்பெரும் தலைவரைப் பற்றி வேறு எதைச் சொல்வது ?

நான் சமகால அரசியலைப் பற்றிப் பேச வந்து திரும்பத்திரும்ப அண்ணன் சிவாவிடம் போய்க்கொண்டிருக்கின்றேன்.

இலங்கையில் ஜனாதிபதிகளை இந்தியா அழைக்கிற போது, அதில் என்ன சூட்சுமம் இருக்கும் என்பது ஒருபுறம். ஆனால், இந்திய வெளிவுறவு அமைச்சர் இங்கு வந்தபோது, இலங்கை ஜனாதிபதி இந்தியா போனதும் ஒரு கூட்டறிக்கை வெளியிடுவார்கள்.அந்தக் கூட்டறிக்கையின் உள்ளடக்கம் எப்படி அமைய வேண்டும் என்று ஏற்கனவே முன்னேற்பாடுகள் நடக்கும். அந்த முன்னேற்பாடுகளில் ஒன்றாக 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது என்பது சம்பந்தமாகவும் உள்ளடக்கப்படவேண்டும் என்பது இந்தியாவின் விருப்பமாக இருக்கும் , இருந்தது , இனியும் இருக்கலாம் என்கிற விடயம் எல்லோருக்கும் தெரிந்த விவகாரம்.

எனவே, அதில் அதை எப்படி போடுவது என்பதில் இலங்கை ஜனாதிபதி செயலகத்தினருக்கும் இந்திய வெளியுறவுச் செயலாளருக்குமிடையில் நீண்ட நெடிய பேச்சுவார்த்தைகளில் கொஞ்சம் இழுபறி என்றும் கேள்விப்பட்டோம். என்ன இழுபறி என்று பார்த்தால், இலங்கை ஜனாதிபதி அப்படி அறிக்கையை கூட்டாக வெளியிடுகிற போது, 13ஆவது திருத்தச்சட்டத்தை பாராளுமன்றத்தின் தீர்மானத்தனுக்கு அமைவாக நாங்கள் நிறைவேற்றுவோம் என்று போட முயற்சிக்கிறார். இது அவருக்கே உரித்தான, கபடத்தனமான ஒரு செயற்பாடு.இதற்கு இந்திய அரசு ஒப்புதல் தருமா, இல்லையா என்பதை அவர் அந்தக் கூட்டறிக்கை வந்தால்தான் தெரியும். சிலவேளை கூட்டறிக்கை வராமல் விட்டுவிடலாம், இந்தக் காரணத்துக்காக, இப்படி இந்த மாயமான் தேடுகிற வித்தை மாதிரி இனி 13ஆவது திருத்தச் சட்டத்தின் முழு அமுலாக்கத்தையும் நாங்கள் அண்ணாந்து பார்த்துக் கொண்டு, எதிர்பார்த்துக் கொண்டிருப்பதா என்கிற ஒரு நிலைவரம்.ஆனால், தமிழக முதல்வரைக் கேட்டால், இங்கு 13ஆவது திருத்தம் அமுலாக்கம் ஒருபுறம் இருக்கட்டும், தமிழகத்தில் மத்திய அரசின் ஆளுநராக இருப்பவரின் அட்டகாசத்தைப் பார்த்தால் அவருக்கு எதிராக இந்திய ஜனாதிபதிக்கு தமிழக முதல்வர் கடிதம் எழுதியிருக்கிறார். "இந்த அட்டகாசத்தை நிறுத்துங்கள் ; எங்களுடைய உரிமைகளை, தந்ததைப் பறிக்கிற இந்தத் தந்திரோபாயத்திலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று தமிழகம் டெல்லியைப் பார்த்து கேட்கிறது. இதுதான் அங்கு இருக்கிற அதிகாரப் பகிர்வின் இலட்சணம்.

இது, நான் இன்னொரு நாட்டின் அரசியலைப் பேசுகிறேன் என்பதல்ல. ஆனால், இந்த இடத்திலேதான் நாங்கள் எதைப்பார்த்து எதற்காக ஏங்கிக்கொண்டிருக்கிறோம் என்று எத்தனிக்கிறபோது, எமக்குள்ளே எமது நாட்டில் அந்தத் தீர்வைப் பெற்றுத்தருகிற அந்த வல்லமை இந்த ஜனாதிபதிக்கு இல்லையென்றால், இன்னொரு நாட்டின் தயவில் ஒரு கூட்டறிக்கையின் செயற்பாட்டினால் அதை நாங்கள் அடையமுடியும் என்று அபரிமிதமாக எதிர்பார்க்கலாமா என்பதுதான் நான் கேட்கின்ற கேள்வி.

இராஜதந்திர பிராந்திய மூலோபாய தத்துவங்களுக்குள்ளே சிக்கித்தவிக்கின்ற எல்லா நாடுகளுக்கும் மத்தியில் நாங்களும் இருக்கிறோம்.

இதைத்தான் ஓர் இடத்தில் மேற்கோள் காட்டுவதற்காக விடுதலைப் புலிகளின் தலைவர், இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட உடனேயே ஒரு பகிரங்க அறிக்கையில் ஒன்றைச் சொல்லியிருக்கின்றார். அதாவது,

"The Agreement -Hindu Lanka Accord did not concern only the problems of Tamils. This is primarily concerned with Indo-Lanka relations. It also contains within itself the principle requirement for Sri Lanka to exceed India .India's power has decide in a manner that is essential. What are we to do?"

"இந்திய-இலங்கை ஒப்பந்தம் தமிழர்களின் பிரச்சினைகளை மட்டும் கருத்தில் கொள்ளவில்லை. இது முதன்மையாக இந்திய -இலங்கை உறவுகளுடன் தொடர்புடையது. இந்தியா இலங்கையை விஞ்சி விட வேண்டும் என்ற அடிப்படைத் தேவையையும் அது தன்னகத்தே கொண்டுள்ளது"

அப்படி அங்கலாய்த்த விடுதலைப் புலிகளின் தலைவர் ஓர்,இரண்டு மாதங்கள் போகவில்லை இலங்கைப் படையோடு மோதவில்லை. இந்திய அமைதிப் படையோடு மோதலை ஆரம்பிக்கிறார் .

அந்த மோதலின் பின்னணியில்தான் இலங்கை இனப் பிரச்சினை இன்னும் பூதாகரமாகத் தீவிரமடைந்தது.

எல்லோருக்கும் தெரியும் இந்திய- இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது, ஒப்பந்தம் ஒருபுறம் இருக்க, ஒப்பந்தத்துக்குப் புறம்பாக கடிதப்பரிமாற்றம் நடந்தது .

அந்த கடிதப்பரிமாற்றத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்று இலங்கையில் இருக்கிற தமிழ் விடுதலை ஆயுதக் குழுக்கள் அனைத்தினதும் ஆயுதங்கள் களையப்படவேண்டும். அந்தக் களைவுக்கு இந்தியா உத்தரவாதமளிக்கிறது என்பது ஒரு கடிதப்பரிமாற்றத்தின் ஏற்பாடு. இந்த ஏற்பாட்டோடு சேர்த்துத்தான் அன்று விடுதலைப் புலிகளோடு முரண்பாடு ஏற்பட்ட நிலையில், அன்றைய இந்தியத் தூதுவர் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடகிழக்குக்கு தேர்தல் நடத்துவது என்ற விவகாரத்தில் முனைப்புக் காட்டினார். ஏன் முனைப்புக் காட்டினார்? இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி மாகாண சபையை அமைப்பதற்கான முஸ்தீபுகளில் ஈடுபடுவதற்காக, நாங்கள் தேர்தல் நடத்தப்போகிறோம் என்பதன் மூலம் நாங்கள் தமிழர்கள் மத்தியில் இந்த ஆயுதக் களைவுக்கு அங்கீகாரம் பெறலாம் என்பதுதான் அதனுடைய ஏற்பாடு.

ஏனென்றால், அன்றைய பொதுமக்களின் கருத்து, இதனை டிக் ஷித் ஓர் இடத்தில் " நாங்கள் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைந்து அவர்களையும் அரசியல் நீரோட்டத்துக்குள் கொண்டுவரும் வரை தேர்தல் நடத்தக்கூடாது என்று எங்களது உளவுத்துறை நினைக்கிறது " என்று சொல்கிறார். "உளவுத்துறையை மீறி, நான் நினைக்கிறேன் இப்படிச் செய்தால்தான் அதை ஓர்அழுத்தமாக விடுதலைப் புலிகளுக்கு மேல் எங்களால் கொண்டுவரமுடியும். எனவே, தேர்தல் நடத்தவேண்டும்" என்கிறார்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இந்தியாவுக்குச் சென்ற ஜனாதிபதிக்கும் தேர்தல் நடத்துங்கள் என்று இந்தியா சொல்லும். விடுதலைப் புலிகள் இந்தியா அமைதிப்படையோடு மோதியபோதும் தேர்தல் நடத்தித்தான் ஆகவேண்டும் என்று விடாப்பிடியாக இருந்த இந்தியா அரசு , தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர்களான எங்களை ஏமாற்றியது போல் , ஏமாற்றிவிடுமா என்பதை நாங்கள் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இருந்தாலும், சில ஊகங்களை நான் பகிர்ந்து கொள்கிறேன். நடக்கவில்லை என்றாலும் ஒன்றும் செய்ய முடியாது, ஜனாதிபதியின் வீடு தீப்பற்றி எரிந்ததற்கே நானும் சுமந்திரனும்தான் காரணம் என்று சொல்லிப்போட்டார்.இப்படியான நிலைவரங்கள் இருந்த நிலையில், இப்போது அவர் அங்கு போய்வந்து இங்கு தேர்தலை நடத்துவாரா என்பது அடுத்த விடயம்.

இப்படி இருக்கத்தக்கதாக, முதலாவது வடகிழக்கு மாகாண சபைத் தேர்தல் ஏதோவொரு வகையில் நடக்கிறது. அந்த மாகாண சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்துகொள்ளவில்லை.எந்த நிலைப்பாட்டை அன்று இந்திய உளவுத்துறை தெளிவாகச் சொன்னதோ விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை களையும்வரை தேர்தல் நடத்தவேண்டாம் என்ற டிக் ஷித் சொல்லுகின்ற மாதிரி அன்று இந்திய உளவுத்துறை எதை நினைத்ததோ தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் அதே கொள்கையில் இருந்தார்கள்.

அதனுடைய விளைவு நாங்கள் தலைவர்கள் நிறையப் பேர்களை பலிகொடுத்துவிட்டோம்.

வடகிழக்கிலும் தெற்கிலும் சாமான்யமான தலைவர்களல்லர். பெரும் பெரும் தலைவர்களை ஏன் ஜனாதிபதி பிரேமதாச உட்பட தெற்கில் லலித் அத்துலத் முதலி, காமினி திசாநாயக்க என்றொரு நீண்ட பெரும் பட்டியல். சந்திரிக்கா அம்மையாருடைய கண் பார்வை பறிபோய்விட்டது. அண்ணன் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் என அப்படியொரு நீண்ட பட்டியல், இப்படி எல்லாப் புறங்களிலும் தலைவர்களை இழப்பதற்கு இந்த ஆயுதக்களைவு நடக்கும் என்று இந்தியா தந்த உத்தரவாதம் நடக்காமல் இருந்தது. இந்திய அமைதிப் படைக்கும் புலிகளுக்கும் மோதல் தொடர்ந்தது. இதனால் இந்த அவலம் நிகழ்ந்ததா ? இந்த இழப்புகளை சந்தித்தோமா ? என்று அரசியல் அவதானிகள் இதனை பலவாறு பார்க்கலாம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நக்கல் நமசிவாயம்

13 ஆவது திருத்தம் இப்போது தமிழருக்கு தேவையோ இல்லையோ ரணிலுக்கு கட்டாயம் தேவை பாருங்கோ...அப்போதுதான் தமிழரின்ர வாக்குகள் கிடைக்கும்...



# உணவுப் பாதுகாப்பு குறித்த கொள்கை வரைபு தேசிய பேரவையின் உப குழுவிடம் சமர்ப்பிப்பு





உணவுப் பாதுகாப்பு (விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி) தொடர்பான கொள்கை வரைபு குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் கூடிய குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழுவில் இந்த வரைபு சமர்ப்பிக்கப்பட்டது.

உணவுப் பாதுகாப்புக்கான தேசிய கொள்கையொன்றைத் தயாரிக்கும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன தலைமையில் செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் இந்தக் குழு சுமார் எட்டு மாதங்களுக்கு மேலாகக் கூடி ஆராய்ந்து இந்தக் கொள்கைக் கட்டமைப்பைத் தயாரித்துள்ளது.

நீர்ப்பாசன அமைச்சு, கமத்தொழில் அமைச்சு, கடற்றொழில் அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு, வன ஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சு, கல்வி அமைச்சு, வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு உட்பட்ட அமைச்சுகளின் செயலாளர்களும் வடமேல் மாகாண விவசாய அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உணவு மற்றும் விவசாய அமைப்பு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைவுத் திணைக்களம் உட்பட பல்வேறு நிறுவனங்களின் முக்கியஸ்தர்களும் இணைந்து இதனைத் தயாரித்துள்ளனர்.

நாட்டுக்குத் தேவையான உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான குறுகியகால, நீண்டகால யோசனைகள் பல இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உணவுப் பாதுகாப்புக்கான கருத்தியல் கொள்கைக் கட்டமைப்பை தேசிய பேரவையில் சமர்ப்பித்து அதனூடாக பாராளுமன்றத்துக்கு இது சமர்ப்பிக்கப்படும் என குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

எதிர்காலத்தில், சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு அறிவிக்கப்பட்டு, நிறுவன ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதற்குத் தேவையான சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான அசங்க நவரத்ன, சாகர காரியவசம், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் அடங்கிய குழுவினர் கலந்துகொண்டனர்.

# ஜனாதிபதி ரணிலை சந்தித்தார் ஜப்பான் வெளியுறவு அமைச்சர்

## இலகு ரயில் திட்டம் உட்பட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்த அவதானம்







இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி யோஷிமாசா,ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் (29) கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை நினைவு கூர்ந்து இந்தக் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டதுடன் பல்வேறு துறைகளில் அந்த உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இரு தரப்பும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்படுவதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

இலங்கையில் கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டுக்கு ஜப்பான் அரசாங்கம் வழங்கும் ஆதரவுக்கு இதன்போது நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடன் மறுசீரமைப்பு தொடர்பான பொதுவான தளத்தை மேம்படுத்தும் மற்றும் செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்கில் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனுடன் நடைபெற்ற கலந்துரையாடல் குறித்தும் விளக்கினார்.

மேலும், ஜப்பான்-இலங்கை ஒத்துழைப்பின் முக்கிய விடயமான இலகு ரயில் திட்டம் , துறைமுக கிழக்கு முனையம், கண்டி அபிவிருத்தித் திட்டம், மத்திய அதிவேக நெடுஞ்சாலை மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய விரிவாக்கல் திட்டங்களை துரிதப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்து சமுத்திர பிராந்தியத்தை அமைதியான மற்றும் நிலையான பிராந்தியமாகப் பேணுவதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டதுடன், பிராந்திய மற்றும் பல்வேறு உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரும் கலந்துரையாடினர்.

தொழில் சந்தை சார்ந்த பொருளாதாரத்தில் இருந்து உயர் தொழில்நுட்ப பொருளாதார மாற்றத்தை எதிர்பார்த்துள்ள இலங்கையின், உயர் தொழில்நுட்ப கைத்தொழில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சருக்கு தெளிவூட்டியதோடு அதற்காக ஜப்பானிய முதலீட்டாளர்களை ஊக்குவிக்க அவசியமான பணிகளை மேற்கொள்வதாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். ஜப்பான் வெளியுறவு அமைச்சர் ஹயாஷி யோஷிமாசாவின் சிரேஷ்ட வெளியுறவுக் கொள்கை ஒருங்கிணைப்பாளர் முரகாமி மனபு, தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு ஆசிய விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் அரிமா யுடகா, சர்வதேச ஒத்துழைப்பு பணிப்பாளர் நாயகம் எண்டோ கசுயா, ஜப்பான் வெளியுறவு அமைச்சின் பிரதி ஊடக செயலாளர் ஒகானோ யுகிகோ மற்றும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் ஹிடேகி மிசுகோஷி, அமைச்சரின் நிறைவேற்று உதவியாளர் டொமோசபுரோ எசாகி, தென்மேற்கு ஆசிய விவகாரப் பிரிவின் பணிப்பாளர் டாரோ ட்சுமி ,

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன உள்ளிட்டோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# இறந்த நிலையில் கரையொதுங்கிய கடலாமை



உடப்பு நிருபர்

உடப்பு, சின்னக்கொலனி கடற்கரைப் பகுதியில் இறந்த நிலையில் கடலாமை ஒன்று கரையொதுங்கியது.இது சுமார் 30கிலோ கிராம் எடை கொண்டதாகக் காணப்படுகிறது. ஆமையின் கழுத்து துண்டாடப்பட்ட நிலையில் காணப்பட்டது.கடலில் பாரிய வலையில் சிக்கிக்கொண்ட பின்னர் இது மீனவர்களால் வெட்டப்பட்டு வீசப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

# வாகன விபத்தில் இளைஞன் உயிரிழப்பு;ஒருவர் படுகாயம்

ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடிக்கருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞரொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மற்றொரு நபர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடிக்கு அருகாமையில் நின்றிருந்த உழவு இயந்திரம் மற்றும் செயலிழந்திருந்த கெப் ரக வாகனம் ஆகியவற்றுடன் அதே திசையில் பயணித்த பாரவூர்தி மோதியயே குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் கெப்ரக வாகனத்தில் இருந்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மற்றொரு நபர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் 23 வயதுடைய இராமச்சந்திரன் சதீஸ்குமார் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பாராளுமன்ற பணியாளர்களுக்கு பாலியல் தொல்லை: உயரதிகாரிகளிடம் முறைப்பாடு

பாராளுமன்றத்தில் பணியாளர்களாக கடமையாற்றும் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாவதாக பாராளுமன்ற உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சமீபகாலமாக சில முக்கிய அதிகாரிகளிடம் இருந்து முறைகேடுகள் நடப்பதாக உயர் அதிகாரிகளிடம் புகார் அளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும் இவ்வாறான சம்பவங்களுக்கு இணங்காவிட்டால் பல்வேறு பழிவாங்கல்களுக்கு உள்ளாக நேரிடுவதாகவும் முறைப்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தில் நீதி வழங்கப்பட வேண்டுமென பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

சில ஊழியர்கள் தமது தொழிலை பாதுகாத்துக் கொள்வதற்காக இது தொடர்பில் முறைப்பாடு செய்ய அச்சப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதனிடையே இது தொடர்பாக பாராளுமன்ற மகளிர் மன்றத்தில் எழுத்துபூர்வமாக புகார் செய்ய அதே ஊழியர்கள் தயாராக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கஞ்சா,மதுபானம் வைத்திருந்த இருவர் சந்தேகத்தின் பேரில் கைது

அநுராதபுரம் நிருபர்

ஆறு கிலோவுக்கும் அதிகமான கஞ்சாவையும் சட்டவிரோதமாக மதுபான போத்தல்களையும் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டதாக அநுராதபுரம் வலய போதை ஒழிப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றுக்கமைய நேற்றுமுன்தினம் (29)இரவு பத்து மணியளவில் அநுராதபுரம்,சிராவஸ்திபுர பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின் போது ஆறு கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சாவும் சட்டவிரோதமாக வைத்திருந்த 4000 மில்லி லீற்றர் மதுபானமும் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேக நபர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.கைது செய்யப்பட்டவர்கள் 22,24 வயதுகளையுடைய அநுராதபுரம், சிராவஸ்திபுர பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வலய போதை ஒழிப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சி கல்லூரியில் கணனி ஆய்வுகூடம்



பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் அமைக்கப்பட்ட கணனி ஆய்வுகூடம் திறந்த வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான நிகழ்வில் வடக்கு மாகாண பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி, நிதி அனுசரணையாளர்கள், தாதிய மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் - இடைக்கால இழப்பீடு வழங்க ஒப்புதல்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் பேரழிவில் கப்பல் உரிமையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வழக்கறிஞர்கள், பாதிக்கப்பட்ட மீனவ சமூகத்துக்கும் கடல் மாசுபாட்டுக்கும் இடைக்கால இழப்பீடு வழங்க ஒப்புக்கொண்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.





கொழும்பு - 13, கதிரேசன் வீதி, அருள்மிகு ஸ்ரீ காட்டுமாரி அம்மன் ஆலய வருஷாபிஷேக அலங்கார உற்சவ பெருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆலய அறங்காவலர் மகேஸ்வரி ஸ்ரீதரன் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. சிவஸ்ரீ சிவநேசன் சிவாச்சாரியாரின் வழிநடத்தலுடன் பிரதம குரு பிரம்மஸ்ரீ செ. சரவணகாந்த் குருக்கள் பூசையை நடத்தினார்.

படப்பிடிப்பு: எம்.நசார்



எம். டி. எவ். ஈ. நிறுவனத்தினால் பதுளை பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு பேண்ட் வாத்தியக் கருவிகள், சீருடைகள் என்பன வழங்கப்பட்டன. அதிபர் எம். ஏ. ஹைருன் நிஸா தலைமையில் இடம்பெற்ற இதுதொடர்பான நிகழ்வில் மாணவர்கள்,பெற்றோர் மற்றும் எம். டி. எவ். ஈ. நிறுவனத்தின் நிறைவேற்று இயக்குநர் எஸ். எம். சியாம்டீன் எனப் பலர் கலந்துகொண்டனர்.

படப்பிடிப்பு: இக்பால் அலி


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

சனிக்கிழமை 2023.07.29 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

| மஹஜன சம்பத | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 5190 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 27,302,920.00 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 0 4 1 8 7 7 |

| கொவிசெத | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 3432 |
| சீட்டிழுப்பு திகதி | 2023.07.29 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | Rs. 70,850,302.00 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 03 33 51 65 |
| விசேட எழுத்து | I |
| இலட்சாதிபதி பவர் சான்ஸ் வெற்றி இலக்கம் | 54891 |

| லக்கி 7 | |
|---|---|
| திகதி | 2023.07.29 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0016 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| L7 இலக்கம் | 1 4 |
| வெற்றி இலக்கங்கள் | 6 6 1 6 0 8 |
| அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு | ரூ. 10,288,742.16 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 2023/07/29 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1220 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 102,396,070.40 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 48 57 63 71 |
| விசேட எழுத்து | S |
| Double Chance இலக்கம் | 12402 |

| ராசி சுப பலன் Handahana | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 499 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 4,055,692.60 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 17 37 38 44 |
| விசேட இலக்கினம் | மீனம் |

| Mega Power | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1538 |
| திகதி | 29/07/2023 |
| Double Chance | 29268 |
| அடுத்த மெகா சுப்பர் பரிசு | ரூ. 402,614,148.00 |
| ஆங்கில எழுத்து | W |
| சுப்பர் இலக்கம் | 16 |
| வெற்றி இலக்கங்கள் | 08 18 35 72 |
| அடுத்த பவர் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |
| அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

வெள்ளிக்கிழமை 2023.07.28 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

| மஹஜன சம்பத | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 5189 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 26,785,328.00 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 1 6 7 6 5 2 |

விசேட சீட்டிழுப்பு

லக்ஷபதி அதிர்ஷ்ட இலக்கம் 1 9 6 4 2

| | | | |
|---|---|---|---|
| 1. மோட்டார் சைக்கிள்கள் | 0 4 4 2 9 2 4 | 6. தங்க நாணயங்கள் | 1 0 6 8 4 1 3 |
| 2. மோட்டார் சைக்கிள்கள் | 1 0 7 8 1 7 9 | 7. தங்க நாணயங்கள் | 2 4 6 2 6 1 0 |
| 3. iPhone | 0 2 7 8 5 2 7 | 8. தங்க நாணயங்கள் | 1 4 3 2 7 1 5 |
| 4. தங்க நாணயங்கள் | 0 1 1 7 6 3 7 | 9. தங்க நாணயங்கள் | 0 5 5 9 8 4 1 |
| 5. தங்க நாணயங்கள் | 0 8 8 2 1 1 6 | 10. தங்க நாணயங்கள் | 1 5 2 7 5 6 5 |

| கொவிசெத | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 3431 |
| சீட்டிழுப்பு திகதி | 2023.07.28 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | Rs. 70,688,569.60 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 19 37 40 54 |
| விசேட எழுத்து | I |
| இலட்சாதிபதி பவர் சான்ஸ் வெற்றி இலக்கம் | 63511 |

| லக்கி 7 | |
|---|---|
| திகதி | 28.07.2023 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0015 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| L7 இலக்கம் | 3 6 |
| வெற்றி இலக்கங்கள் | 5 7 0 5 0 8 |
| அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு | ரூ. 10,252,315.44 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 2023/07/28 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1219 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 102,158,267.20 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 13 15 27 82 |
| விசேட எழுத்து | O |
| Double Chance இலக்கம் | 21523 |

| ராசி சுப பலன் Handahana | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 498 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 3,924,108.60 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 11 16 55 |
| விசேட இலக்கினம் | மிதுனம் |

| Mega Power | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1537 |
| திகதி | 28/07/2023 |
| Double Chance | 51412 |
| அடுத்த மெகா சுப்பர் பரிசு | ரூ. 402,507,728.00 |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 05 |
| வெற்றி இலக்கங்கள் | 17 20 45 49 |
| அடுத்த பவர் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |
| அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |

# அமைச்சர் டக்ளஸை சந்தித்துப் பேச்சு நடத்திய கடற்றொழிலாளர்கள்!



யாழ்ப்பாணம் - குருநகர் சிறகுவலை தொழிலாளர் சங்கம் மற்றும் பாஷையூர் கடற்றொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் (29) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துக் கலந்துரை யாடினர்.

கிளிநொச்சி, கௌதாரிமுனை பகுதியில் குருநகர் மற்றும் பாஷையூர் கடற்றொழிலாளர்களினால் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டு வந்த சிறகு வலைத் தொழிலுக்கு எதிராக கிளிநொச்சி கடற்றொழில் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கௌதாரிமுனை கடற்றொழிலாளர்களின் தொடர்ச்சியான அழுத்தம் காரணமாக கடற்றொழில் திணைக்களம் குறித்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த குருநகர், பாஷையூர் கடற்றொழிலாளர்கள், பாரம்பரியமாக தாங்கள் தொழில் மேற்கொண்டு வந்த பிரதேசங்களில் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்படுமாயின், நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தனர்.

இந்நிலையில், சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடி எந்தத் தரப்பினரும் பாதிப்புறாத வகையில் சுமூகமான தீர்வைக் காண்பதற்கு முயற்சிப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

# வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 160 கிலோ எடை கொண்ட கடல் ஆமை மீட்பு



மன்னார் நகர் நிருபர்

மன்னாரில் வீடொன்றில் கயிற்றால் கட்டி உயிருடன் மறைத்துவைக்கப்பட்டிருந்த சுமார் 160 கிலோ கிராம் எடை கொண்ட அரிய வகை கடல் ஆமையை கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து வியாழக்கிழமை மாலை (27) மீட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனங்கட்டிக்கொட்டுப் பகுதியில் உள்ள வீடொன்றில் கடலாமை மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினருக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டது.

குறித்த தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப்படையினர் உரிய அதிகாரிகளுடன் சென்று குறித்த ஆமையை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கடலாமை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கடலாமையின் உடலில் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதால் அதற்கு சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுத்ததாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த கடலாமையை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த வீட்டின் உரிமையாளர் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிள்ளை வரம் கேட்டேன் - மாதா தரவில்லை அதனால்தான் சிலைகளை உடைத்தேன்

## சிலையுடைப்பின் சந்தேகநபர் தெரிவிப்பு

யாழ்.நிருபர்

"மாதாவிடம் நேர்த்தி வைத்தும் பிள்ளை கிடைக்கவில்லை" அந்த விரக்தியிலேயே ஆனைக்கோட்டையில் மாதா சிலைகளை சேதப்படுத்தினேன் என, மாதா சிலைகளை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் கைதான சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பொலிஸ் பிரிவில் ஆறுக்கும் மேற்பட்ட இடங்களில் மாதா சிலைகள் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலையில் சேதப்படுத்தப்பட்டிருந்தன.

அது தொடர்பில் தீவிர விசாரணைகளை முன்னெடுத்த மானிப்பாய் பொலிஸார், சுதுமலை தெற்கு, சாவல்காடு பகுதியைச் சேர்ந்த 32 வயதான ஒருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் முன்னெடுத்த விசாரணையில், நான் சைவ சமயத்தைச் சேர்ந்தவன். மனைவி கிறிஸ்தவர். இருவரும் திருமணம் செய்து சில வருடங்களாகியும் பிள்ளைகள் கிடைக்காத விரக்தியில் இருந்தேன்.

அவ்வேளையில் , "பிள்ளை வேண்டுமென மாதாவிடம் நேர்த்தி வைத்தேன். இருந்தும், பிள்ளை கிடைக்காத விரக்தியில் இருந்தேன். இதனால், ஆத்திரத்தில் மாதா சிலைகளைச் சேதப்படுத்தினேன்'' - எனத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.



## திருமதி தனேஸ்வரி இரவீந்திரன் பேராசிரியராகப் பதவி உயர்வு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரைப் பேராசிரியராகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் (29), சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கணமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த மனித வள முகாமைத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) தனேஸ்வரி இரவீந்திரனின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி, மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி தனேஸ்வரி இரவீந்திரன் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

# வங்கிக் கணக்குகளை உடனடியாக ஆரம்பியுங்கள்

## நலன்புரி நன்மைகள் சபையின் கொடுப்பனவை பெற்றுக்கொள்ள தெரிவான பயனாளிகளுக்கு மன்னார் அரச அதிபரின் அறிவுறுத்தல்

மன்னார் நகர் நிருபர்

மன்னார் மாவட்டத்தில் நலன்புரி நன்மைகள் சபையின் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் உடனடியாக வங்கிக் கணக்கை ஆரம்பித்து சமர்ப்பிக்குமாறு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் நலன்புரி நன்மைகள் சபையின் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் நாளை செவ்வாய்க்கிழமை வரை வங்கிக் கணக்குகளைத் திறக்க முடியும்.



நாளை முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை விடுமுறையாக உள்ள போதும் வங்கிகள் விசேடமாகத் திறக்கப்படும்.

கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிக்க முடியும்.

எனவே, தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் குறித்த வங்கிகளில் ஏதாவது ஒரு வங்கியில் வங்கிக்கணக்கைத் திறந்து சமர்ப்பிக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# வாகன விபத்தில் சாரதி உயிரிழப்பு

ஆ.ரமேஸ்.

திம்புள-பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மவுண்ட்வோர்ணன் தோட்டத்தின் தேயிலை மலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் சாரதி உயிரிழந்துள்ளதாக திம்புள-பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை (29) இடம்பெற்றுள்ளது.தோட்டத் தொழிற்சாலைக்கு தேயிலைக் கொழுந்து ஏற்றிச்சென்ற டெக்டர் வாகனத்தின் இயந்திரப் பகுதி தோட்ட வீதியை விட்டு விலகி 50 அடி பள்ளத்தில் கவிழ்ந்து இவ்விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது இயந்திரத்தை இயக்கிய சாரதி



பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் மீட்கப்பட்டு கொட்டக்கலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா குளங்கள் வைத்திய சாலைக்கு கொண்டுசென்று அங்கு அவருக்கு அளித்த சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் பி.சி.டேவிட் (வயது 48) என சம்பவம் தொடர்பில் விசாரணைகளை செய்து வரும் திம்புள-பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். மேலும் கொழுந்து ஏற்றிச் சென்ற டெக்டர் வாகன இயந்திரத்தின் இணைப்பு பகுதி உடைந்த நிலையில் இயந்திரம் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# தனியார் பஸ் விபத்தில் பத்துப்பேர் காயம்



ஏ.ஏ.எம்.பாயிஸ்

கொழும்பிலிருந்து மொனராகல நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று கொடக்கவெலை - கல்ஹிட்டியா பிரதேசத்தில் நேற்று (30) விபத்துக்குள்ளானதில்10 பேர் காயமடைந்துள்ளனர்.

சாரதியின் நித்திரைத்தூக்கமே இந்த விபத்துக்கான காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இவ்விபத்தில் காயமடைந்த 10 பேர் காவத்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து பஸ்சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை இறக்குவானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குடிநீர் விநியோகத் திட்டத்தை துரிதப்படுத்த ஒருங்கிணைப்புக்குழு நடவடிக்கை





கண்டி நிருபர்

கண்டி வடக்கு குடிநீர் விநியோகத் திட்டத்தில் எஞ்சியுள்ள பணிகளை துரிதப்படுத்த கண்டி மாவட்ட ஒழுங்கிணைப்புக்குழு முடிவு செய்துள்ளது.

அண்மையில் கண்டி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது. இது பற்றி கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் தெரிவித்ததாவது:-

2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கண்டி வடக்கு நீர் விநியோகத்திட்டமானது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பாரிய குடிநீர் விநியோகத் திட்டங்களில் ஒன்றாகும். இதற்கு சீன அரசினால் கடனாக வழங்கப்பட்ட 51,324 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டுள்ளது. 22 இடங்களில் இருந்து நீர் பம்பிகளூடாக அனுப்பப்பட்டுவரும் நிலையில், 27 இடங்களில் நீர் சேமிப்புக்கான பாரிய தொட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

ஹாரிஸ்பத்துவ, பூஜாபிட்டிய, அக்குறணை, பாத்ததும்பறை, கங்கவட்டகோரளை, தும்பனை பிரதேச செயலாளர் பிரிவுகளுடன் மாவத்தகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயப் பகுதிகளும் இதனால் நன்மையடைந்து வருகின்றன.

எதிர்காலத்தில் தற்போதைய 75,000 குடும்பங்களுக்கு மேலதிகமாக இன்னும் 1,25 000 குடும்பங்கள் நன்மையடையவுள்ளன. எனவே, இலகு கடன் அடிப்படையில் மாதாந்த பட்டியலில் சிறு தொகையை சேர்த்து ஆரம்ப கட்டணத்தை ஈடுசெய்யும் படி சம்பந்தப்பட்ட நீர் விநியோக சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இதே அடிப்படையில் நீர் வடிகால் அமைப்புச் சபை, நீர் பம்பிகளுக்கான மின்கட்டணத்தையும் மின்சார சபைக்கு வழங்க முடிவு செய்யப்பட்டது.

அதாவது, இத்திட்டத்தின் கீழ் 22 நீர்ப்பம்பி நிலையங்களும் 27 பாரிய நீர் சேகரிப்பு தொட்டிகளும் உள்ளன. இவற்றுக்கு நீர் பம்பண்ணுவதற்கு பாரியளவு மின் கட்டனம் செலவிடப்படுகிறது. அது தாமதிப்பதும் இப்பணிக்கு சவாலாக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.



அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் உதவி பெறுபவர்கள் வங்கிக்கணக்குகளை ஆரம்பிப்பதற்கென மடவளை பஸார், இலங்கை வங்கிக் கிளை முன் காத்திருப்பதைக் காணலாம்.வயோதிபர்கள், அங்கவீனர்கள் எனப் பலர் குழுமி நிற்கும் போது...

படம் கண்டி நிருபர்

# மத்திய மாகாணத்தில் மாணவர் வரவுக்கான சலுகைகளை எதிர்காலத்தில் நீக்கத் தீர்மானம்

## மத்திய மாகாண ஆளுநர்

கண்டி நிருபர்

மத்திய மாகாணப் பாடசாலைகளுக்கு கொவிட் -19 தொற்று காலத்தில் க.பொ.த. பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்காக பாடசாலை வரவு தொடர்பாக வழங்கப்பட்ட சலுகைகள் எதிர்காலத்தில் நீக்கப்படும் என மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.



கண்டி புனித சில்வெஸ்டர்ஸ் கல்லூயிரில் நேற்றுமுன்தினம் (29) இடம்பெற்ற வைபவம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னர் 80 சதவீத வரவு கட்டாயப்படுத்தப்பட்டிருந்தது. கொவிட் தொற்று காரணமாக ஏற்பட்ட சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு அது மாற்றப்பட்டது.

எதிர்காலத்தில் மீண்டும் 80 வீதத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

இவ்வைபவத்தின் போது பாடசாலை விளையாட்டு மைதான தங்குமிடக் கட்டட திறப்பு விழாவும் இடம் பெற்றது.

# பாடசாலையில் மாணவனைச் சேர்ப்பதற்கு 3 இலட்சம் ரூபா இலஞ்சம் கேட்டவர் கைது

கண்டி நிருபர்

கண்டியிலுள்ள பிரசித்தி பெற்ற பாடசாலை ஒன்றுக்கு மாணவன் ஒருவரைச் சேர்க்க மூன்று இலட்ச ம் ரூபா இலஞ்சம் பெற்று மோசடியில் ஈடுபட்ட நபரொருவர் கட்டுகஸ்தோட்டைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது-

கட்டுகஸ்தோட்டைப் பொலிஸ் பிரதேசத்திலுள்ள குழுகம்மன என்ற இடத்தில் உள்ள ஒரு மாணவனை கண்டியிலுள்ள பிரசித்தி பெற்ற பாடசாலை ஒன்றுக்கு சேர்ப்பதற்கு தனக்கு மூன்று இலட்சம் ரூபா தரவேண்டும் என மாணவனின் பெற்றோரிடம் சந்தேக நபர் கோரிக்கை விடுத்துள்ளார். பின்னர் அப்பணத்தைப் பெற்று மோசடி செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கண்டி, மெனிக்கின்ன பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு நபர் தொடர்பாகவே முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் படி சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உலக செய்திகள்

# மணிப்பூர் ஆளுநரை சந்தித்த I.N.D.I.A கூட்டணி எம்.பிக்கள் குழு



மணிப்பூர் சென்றுள்ள எதிர்க்கட்சி கூட்டணிகளின் எம்.பிக்கள் குழு அம்மாநில ஆளுநரை சந்தித்து, அமைதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை வைத்தனர்.

I.N.D.I.A என்ற பெயரிலான எதிர்க்கட்சி கூட்டணியைச் சேர்ந்த 21 எம்.பிக்கள் அடங்கிய குழு நேற்றுமுன்தினம் மணிப்பூருக்கு சென்றது.

கலவரத்தால் பாதிக்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்கியிருந்த மக்களை சந்தித்த எம்.பிக்கள் குழு, அவர்களது குறைகளையும் தேவைகளையும் கேட்டறிந்தனர். இந்நிலையில் நேற்று தலைநகர் இம்பாலில் மணிப்பூர் ஆளுநர் அனுசுயா உக்கியை நேரில் சந்தித்தனர்.

மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்குமாறும், மாநிலத்தின் நிலைமை குறித்து பிரதமருக்கும், உள்துறை அமைச்சருக்கும் உடனடியாக அறிக்கை அளிக்கும்படியும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

ஆளுநரை சந்தித்த பின்னர் பேசிய காங்கிரஸ் எம்.பி. ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, ''மணிப்பூர் விவகாரத்தில் நாங்கள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு விவாதத்துக்கு வர வேண்டுமென மத்திய அரசுக்கு நாங்கள் கோரிக்கை விடுக்கிறோம். மணிப்பூரில் நிலைமை மோசமாகி வருகிறது. இதனால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை அதிகரிக்கும்'' எனத் தெரிவித்தார்.

மணிப்பூர் மாநிலத்தில் மைத்தேயி - குகி இனத்தவர் இடையேயான கலவரத்தில் இதுவரை 182 பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்தனர். இந்நிலையில் குகி பழங்குடியின பெண்கள் இருவர் ஆடையின்றி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட வீடியோ வெளியாகி உலகம் முழுவதும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது.

## நிதி நெருக்கடி:

# உலகளாவிய ரீதியில் உணவு உதவிகளை குறைக்கும் ஐ.நா.

## ஆப்கானிஸ்தானில் 3 கோடி பேருக்கு மனிதாபிமான உதவிகள் தேவை - யுனிசெப்

நிதி நெருக்கடி காரணமாக உலகளவில் உணவுகளை பெருமளவில் குறைக்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் 03 கோடி மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாக யுனிசெப் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு திட்டத்தின் துணை நிர்வாக இயக்குநர் கார்ல் ஸ்காவ் தெரிவிக்கையில்,

உலக உணவு திட்டம் செயற்படுத்தப்படும் ஆப்கானிஸ்தான், சிரியா, யேமன் மற்றும் மேற்கு ஆபிரிக்கா உள்ளிட்ட 86 நாடுகளில் 38 நாடுகளில் ஏற்கனவே உதவிகள் குறைக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் விரைவில் உதவிகளை குறைக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளன. உலக உணவு திட்டத்தின் கீழ் தேவைப்படும் அனைவருக்கும் உதவ ஆண்டுக்கு சுமார் ரூ.1.60 இலட்சம் கோடி தேவை. ஆனால், தற்போது ரூ.82 ஆயிரம் கோடி முதல் ரூ.1.15 இலட்சம் கோடி மட்டுமே நிதி இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. இதை கூட எட்ட முடியாமல் இந்த ஆண்டு சுமார் ரூ.41 ஆயிரம் கோடி மட்டுமே உலக உணவு திட்டத்துக்கான நன்கொடை நிதி கிடைக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று, உக்ரைன் போர் மற்றும் அதன் உலகளாவிய தாக்கங்கள், மனிதாபிமான தேவைகளின் உச்சத்தை எட்டச் செய்துள்ளது. ஆனால், நிதி மிக மிக குறைந்துள்ளது. எனவே அடுத்த ஆண்டும் நிலைமை மோசமாகவே இருக்கும். இது வரலாற்றில் மிகப்பெரிய உணவு மற்றும் ஊட்டச்சத்து நெருக்கடியை நீட்டிக்க செய்துள்ளது.

இந்த நெருக்கடியான நிலையில் உலக நன்கொடையாளர்கள் எங்களுக்கு ஆதரவளிக்கவேண்டும்.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் அவற்றின் பட்ஜெட்டில் மனிதாபிமான உதவிகளுக்கான நிதியை குறைத்துள்ளன. போதிய நிதி இல்லாததால் ஆப்கானிஸ்தானில் வழங்கப்படும் உதவிகள் 66 சதவீத மக்களுக்கு குறைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். எனவே உலக நாடுகள் மனிதாபிமான உதவிகளுக்கு முன்னுரிமை தர வேண்டிய நேரம் இது'' - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் அரசியல் சூழல் காரணமாக பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து வருகிறது. வெள்ளம், பஞ்சம் காரணமாக ஆப்கான் மக்கள் நெருக்கடியில் உள்ளனர்.

64 சதவீத குடும்பங்கள் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளன. இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் தற்போது 1.5 கோடி மக்கள் உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். 03 கோடி மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன என்று யுனிசெஃப் தெரிவித்துள்ளது.

# வட்ஸ்அப்பில் இனி வீடியோ மெசேஜும் அனுப்பலாம்

## 60 விநாடிகள் வரை வீடியோவை பதிவு செய்யலாம்



'இன்ஸ்டன்ட் வீடியோ மெசேஜ்' எனப்படும் விரைவாக வீடியோ வடிவில் தகவல்களை அனுப்பும் புதிய வசதி வட்ஸ் அப்பில் அறிமுகமாகவுள்ளது.

இன்னும் சில தினங்களில் அறிமுகப்படுத்தப்படும் இந்த வசதியின் மூலம், பயனர்கள் 60 விநாடிகள் வரை வீடியோவை பதிவு செய்து உடனடியாக மற்றவர்களுக்கு அனுப்பிக் கொள்ளலாம்.

ஏற்கனவே உள்ள குரல்வழி செய்தி அனுப்பும் வொய்ஸ் நோட் போன்று செயற்படுத்தப்படவுள்ள இந்த அம்சம், 'ஸ்னப்செட்' செயலியிலுள்ள வீடியோ செய்தி அனுப்பும் வசதி போன்றிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வழக்கமான வீடியோவாக இல்லாமல் இன்ஸ்டண்ட் வீடியோ மெசேஜ்-ஐ வேறுபடுத்த அவை வட்ட வடிவில் காட்டப்படும் என்றும் பாதுகாப்பானதாகவும் தனிப்பட்டவருக்கு பகிர்வதற்கு ஏற்றதாகவும் அவை இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போலந்தை தாக்க பெலாரஸில் முகாமிட்டுள்ள வோக்னர் படை?

## அச்சுறுத்தல் நீடிப்பதாக போலந்து பிரதமர் அறிவிப்பு



ரஷ்யாவால் உக்ரைனுக்கு எதிரான போரில் ஈடுபடுத்தப்பட்ட வோக்னர் படையைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட வீரர்கள் தங்கள் நாட்டு எல்லையை நெருங்க முயற்சிப்பதாக போலந்து பிரதமர் மோராவைக்கி தெரிவித்துள்ளார்.

போலந்து மீது தாக்குதல் நடத்தும் திட்டமாக இது இருக்கலாம். தற்போது இந்தப் படைவீரர்கள் பெலாரஸின் குரோட்னோவில் முகாமிட்டுள்ளனர்.

பெலாரஸின் எல்லைப் பாதுகாப்பு வீரர்கள் போல வேடமிட்டு வோக்னர் வீரர்கள் போலந்துக்குள் ஊடுருவ முயற்சிக்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மொஸ்கோ மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல்: வனுகோவா விமான நிலையத்துக்கு பூட்டு

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உக்ரைன் மேற்கொண்ட ட்ரோன் தாக்குதலில் இரண்டு கட்டடங்கள் சேதமடைந்துள்ளன என அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. தாக்குதலை தொடர்ந்து பாதுகாப்பு காரணங்களுக்காக மொஸ்கோவிலுள்ள விமான நிலையம் மூடப்பட்டது.

உக்ரைன் – ரஷ்யா இடையிலான போர் இன்று 523 நாட்களாக நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்த நிலையில், அமெரிக்கா உட்பட மேற்கத்தேய நாடுகள் உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை வழங்கி வருகின்றன.

போர் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில் நேற்று ரஷ்யா மீது உக்ரைன் டிரோன் தாக்குதல் நடத்தியுள்ளது. ரஷ்ய தலைநகர் மொஸ்கோ மீது நேற்று அதிகாலை மூன்று உக்ரைன் ட்ரோன்கள் தாக்குதல் நடத்தின. இதில் ஒரு ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்ட நிலையில், எஞ்சிய இரண்டு ட்ரோன்களும் மின்னணு ஆயுதங்கள் மூலம் தடுக்கப்பட்டன.

தடுக்கப்பட்ட ட்ரோன்கள் மொஸ்கோவிலுள்ள சர்வதேச வர்த்தக மைய கட்டடம் மீது மோதின. இதில், எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும் ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலை தொடர்ந்து பாதுகாப்பு காரணங்களுக்காக மொஸ்கோவில் வனுகோவா விமான நிலையம் மூடப்பட்டது.

# இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்துக்கு பிரான்ஸ் ஆதரவு





பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் தனது தென் பசுபிக் பிராந்தியத்துக்கான விஜயத்தின் பின்னர் கடந்த 28 ஆம் திகதி இலங்கைக்கு வரலாற்று சிறப்புமிக்க விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

பிரான்ஸ் ஜனாதிபதியொருவர் இலங்கைக்கு வருகை தந்தது இதுவே முதல் தடவையாகும்.

இந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் ஆகியோர் கொழும்பில் சிநேகபூர்வ மற்றும் சாதகமான இருதரப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டனர். பிரான்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

சர்வதேச தொடர்புகளில் பிரான்ஸின் ஈடுபாட்டுக்கு பாராட்டுத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்தல், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு மற்றும் இந்து - பசுபிக் வலய பிரச்சினைகள் தொடர்பில் வழங்கப்படும் ஒத்துழைப்புகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

பிரான்ஸில் அண்மையில் நடைபெற்ற புதிய உலகளாவிய நிதி இணக்கப்பாட்டுக்கான மாநாட்டின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தான் நடத்திய கலந்துரையாடல் தொடர்பில் ஜனாதிபதி மக்ரோன் நினைவு கூர்ந்தார். இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிப்பதாக அவர் மீண்டும் உறுதிப்படுத்தியிருந்ததோடு, இலங்கையின் நான்காவது பெரிய கடன் வழங்குநர் என்ற வகையில் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு தனது ஆதரவை வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

மேற்படி சந்திப்பின் நிறைவில் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்த பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன்,

“இலங்கை மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இந்து சமுத்திரத்தின் திறந்த, விரிவான மற்றும் சுபிட்சமான இந்து - பசுபிக் பிராந்தியத்தின் பொதுவான இலக்குகளை பகிர்ந்து கொள்ளும் இரண்டு நாடுகளாகும். நாம் அதனை கொழும்பில் மீண்டும் உறுதிப்படுத்தினோம். எங்கள் 75 வருடகால இராஜதந்திர உறவுகள் எங்களின் ஒருமைப்பாட்டுக்கான வலுவான இணக்கப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளது” என குறிப்பிட்டிருந்தார்.

அரசியல், பொருளாதாரம், சுற்றுலா, காலநிலை மாற்றம், நிலையான வளர்ச்சி மற்றும் கடல்சார் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களுக்கும் இடையேயான கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான முக்கிய அம்சங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

கடல்சார் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக்கான பாடசாலை ஒன்றை நிறுவுதல், இலங்கையில் அபிவிருத்திக்கான பிரான்ஸ் பணியகம் (AFD) ஒன்றை நிறுவுதல் உயர்மட்ட இராஜதந்திர கலந்துரையாடல்களை ஆரம்பித்தல், கல்வித்துறையில் ஒத்துழைப்பு மற்றும் கடல்வழி ஆள்கடத்தல் செயற்பாடுகளை தடுப்பதற்கான முயற்சிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டன.

மேலும், தற்போதைய உலகளாவிய நகர்வுகள், பிராந்திய மற்றும் பலதரப்பு நலன்கள் குறித்தும் இரு நாட்டுத் தலைவர்களும் கருத்து பரிமாறிக் கொண்டனர். பிரான்ஸ் அங்கம் வகிக்கும் இந்தியப் பெருங்கடல் பிராந்திய சம்மேளனத்தின் (IORA) எதிர்வரும் தலைமைப் பதவிக் காலத்தில் இலங்கையுடன் ஒத்துழைப்புடன் செயற்பட ஆர்வமாக இருப்பதாக பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்தார். பிரான்ஸ் பங்கேற்கும் இந்து சமுத்திர சமமேளனத்துக்கான தனது அர்ப்பணிப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் வெளிப்படுத்தினார்.

2023 ஜூன் 22 முதல் 23 வரையில் பிரான்ஸ் ஜனாதிபதியால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாடு காலோசிதமானது என்பதை அதனில் பங்கேற்றவர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

நிலையான எதிர்காலத்துக்கான உலகளாவிய முயற்சிகளுக்கு இலங்கையின் அர்ப்பணிப்பை வலியுறுத்தி, பாரிஸ் நிகழ்ச்சி நிரலில் இணைவதற்கான இலங்கையின் இணக்கப்பாடு தொடர்பிலும் இங்கு அறிவிக்கப்பட்டது.

பிரான்ஸின் ஐரோப்பிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் கேத்தரின் கொலோனா, இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரான்ஸ் தூதுவர், ஜீன் பிரான்கோசிஸ் பெக்டட், பிரான்ஸ் ஜனாதிபதியின் ஆலோசகர்களான பெபியன் மெண்டன், வலிட் பலூக் மற்றும் ஜோஸ் செரஸ், பிரான்ஸ் வெளியுறவு அமைச்சின் ஆசிய வலயத் தலைவர் பெனாய்ட் கைடி, பிரான்ஸ் ஜனாதிபதியின் ஊடக ஆலோசகர் ஜோன்ஸ் பயார்ட், வெளிக்கள வலயங்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் பிலிப் விஜீயர், வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர் பிலோமியன் கார்டினொக்ஸ் ஆகியோர் பிரான்ஸ் ஜனாதிபதியின் தலைமையில் இருதரப்பு பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா) ஷோபினி குணசேகர ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான இலங்கைக் குழு சார்பில் கலந்துகொண்டனர்.

## “கனடாவில் இனவழிப்பு நிகழ்ந்ததை ஏற்கிறோம்”

# கனடா தூதுவரின் கூற்றிலிருந்து இலங்கை பாடம் கற்க வேண்டும்

## த.மு.கூ. தலைவர் மனோ கணேசன்





கனேடிய தூதுவரின் நிலைப்பாடு எனக்கு புதிதல்ல. எல்லா தரப்பினரும் தவறுகள் செய்கின்றன. அரச நிறுவனமும் செய்கிறது. அரசசார்பற்ற நிறுவனமும் செய்கிறது. இங்கு யாரும் புனிதர் அல்ல என த.மு.கூ. தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற கனேடிய தமிழர் பேரவை ஊடக சந்திப்பில் கனேடிய தூதுவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது கனேடிய தூதுவர் நிகழ்த்திய உரை தொடர்பில் மனோ கணேசன் எம். பி. மேலும் கூறியதாவது,

கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ், என் பக்கத்தில் இருந்தபடி பகிரங்கமாக, “கனடாவில் எங்களின் சொந்த அனுபவம் இருக்கிறது. ஆதிகுடிகள் தொடர்பில் கனடாவில் இனவழிப்பு நிகழ்ந்ததை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். ஆதிக்குடிகளுடனான இனநல்லிணக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. அது தொடர்பில் நாம் பணியாற்றுகிறோம். அது சுலபமல்ல. அது நீண்ட பணி” என்று கூறினார். அதாவது தவறு, குற்றம் நிகழ்ந்ததை, அந்நாட்டு அதிகாரபூர்வ தூதுவர் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதிலிருந்து இலங்கை கற்க வேண்டிய பாடம் என்ன? வரலாற்றில் தவறுகள், குற்றங்கள் எங்கும் நிகழும். ஆனால் அந்த தவறுகள், குற்றங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க, முதலில் நாம் தவறுகள், குற்றங்கள் நிகழ்ந்தன என்பதை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். மன்னிப்புக் கோருவது என்பதுகூட இரண்டாம் பட்சம்தான் என்பதே எனது நிலைப்பாடாகும். ஆனால், தவறுகள், குற்றங்கள் நிகழ்ந்தன என்ற உண்மையை முதலில் ஏற்க வேண்டும். இதுவே இன, மத, நல்லிணக்கத்துக்கு அடிப்படை என்ற பாடத்தை கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷின் கூற்றிலிருந்து இலங்கை அரசியல், மத, சமூகத் தலைவர்கள் கற்க வேண்டும்.

கனேடியத் தூதுவரின் நிலைப்பாடுகள் எனக்கு புதிதல்ல. அவையே எனது நிலைப்பாடுகளுமாகும். எல்லாத் தரப்பினரும் தவறுகள் செய்கின்றன. அரச நிறுவனமும் செய்கிறது. அரச சார்பற்ற நிறுவனமும் செய்கிறது. இங்கு யாரும் புனிதர்கள் அல்லர்.

காலம் ஓடுகிறது. இந்த காலவோட்டத்தில் ஓரிடத்திலேயே தேங்கி தெப்பமாக நிற்க முடியாது. காலம் அனைத்தையும் கடத்தும். இங்கே அனைத்தும் கடந்து போகும். அப்போது புதிய பார்வைகள் தோன்றுகின்றன. புதிய சிந்தனைகள் உதிக்கின்றன. காலம் காட்டும் மாற்றங்களை ஏற்காவிட்டால், காலம் எம்மை தூக்கி வீசிவிட்டு போய்க் கொண்டே இருக்கும். அது யாருக்காகவும் காத்திருக்காது. எனது பார்வை இதுதான்.

நண்பர் எரிக் வோல்ஷ் , “பல்லின, பன்மத, பன்மொழி என்ற பன்மைத்துவத்தை நாம் கொண்டாடுகிறோம்” என்று சொன்னார். “அதுவே எமது பலம்” என்று சொன்னார். அதையே அவருக்கு முன் பேசும்போது நானும் சொன்னேன்.

இலங்கை பன்மைத்துவ நாடு என்ற அடிப்படையை நாம் ஒருபோதும் விட்டுக்கொடுக்கக் கூடாது. அதுவே எமது எதிர்கால மீட்சிக்கு ஒரே வழி என்றும் கூறினார்.



கல்முனை கார்மேல் பற்றிமாக் கல்லூரியில் கொமர்சியல் வங்கியின் பங்களிப்புடன் 13 வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்துக்காக Smart Classroom உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (28) இடம்பெற்றது. கல்லூரி அதிபர் எஸ்.ஈ.ரெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் கல்முனை கொமர்சியல் வங்கிக் கிளையின் அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**படம்:** நிந்தவூர் செய்தியாளர்

# மட்டு. புனித இஞ்ஞாசியார் ஆலய 107ஆவது வருடாந்த திருவிழா



*கல்லடி செய்தியாளர்*

மட்டக்களப்பு மறை மாவட்ட பாதுகாவலராம் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தின் 107 ஆவது வருடாந்த திருவிழா கொடியேற்ற நிகழ்வு வெள்ளிக்கிழமை (28) மாலை இடம்பெற்றது.

பங்குத்தந்தை அருட்பணி லோறன்ஸ் லோகநாதன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற கொடியேற்ற நிகழ்வில் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நவநாட் காலங்களில் தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையும் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.

ஓகஸ்ட் 05ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் அதி.வந்தனைக்குரிய பேரருட்திரு கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதுடன், அத்திருப்பலியில் முதல் நன்மை, உறுதிப்பூசுதல் ஆகிய அருளடையாளங்கள் வழங்கப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து மறுநாள் 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு பெருவிழா கூட்டுத் திருப்பலியானது இயேசு சபை துறவி அருட்பணி அன்ரனி றொபட் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதுடன், பெருவிழா சிறப்பு நிகழ்வாக குறித்த தினத்தன்று மாலை 3.30 மணிக்கு ஆலய முன்றிலில் பங்குப் பேரவையின் தலைமையில் கலைநிகழ்ச்சிகளும் டொம் போலா நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

நவநாட்காலங்களில் அருட்தந்தையர்களான ஜீ.மகிமைதாஸ், எஸ்.றொஷான், ஜெரிஸ்டன் வின்சன்ட், ஐ.ஜெமிஸ்டன், ஏ.ஏ.நவரட்ணம் (நவாஜி), எம்.ஸ்ரனிஸ்லோஸ், பீ.ஜீவராஜ், எட்வட் செல்வராஜ் மற்றும் அருட்தந்தை அன்ரனி றொபட் ஆகியோர் அருளுரையாளர்களாகப் பங்கேற்று திருப்பலியையும் ஒப்புக்கொடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பு, ஏறாவூர் காட்டுமாஞ்சோலை ஸ்ரீபத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் பால்குட பவனி பக்திபூர்வமாக நடைபெற்றது. கடந்த 22ஆம் திகதி கதவு திறத்தலுடன் ஆரம்பமான ஆலய வருடாந்த உற்சவம் தினமும் விசேட பூசைகள் நடத்தப்பட்டு செவ்வாய்க்கிழமை(01) தீ மிதிப்புடன் உற்சவம் நிறைவுபெறுமென ஆலய தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

**படங்கள்:** ஏறாவூர் செய்தியாளர்




மட்டக்களப்பு கல்குடா வலயத்தின் கறுவாக்கேணி விக்னேஸ்வரா கல்லூரியின் 63ஆவது கல்லூரி தினம் சனிக்கிழமை(29) நடைபெற்றது. கல்லூரி அதிபர் எஸ்.சுதாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பழைய மாணவர் சங்க உப தலைவர் கு.லக்ஷ்மணகாந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார். பின்னர் கல்லூரியின் வளர்ச்சிக்கு சேவையாற்றிய முன்னாள் அதிபர்களான க.தவராஜா மற்றும் கா.அருமைராஜா ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் வாழ்த்துமடல் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கல்லூரி சமூகத்தினால் பாராட்டப்பட்டனர். இதன்போது அதிதிகளாக பிரதேச கிராம சேவகர் அ.பிரபு, கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் வாழைச்சேனை பொலிஸ் நிலைய உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

**படங்கள்:** வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்





திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலய கொடியேற்ற நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்றது. தொடர்ந்து 16ஆம் திகதிவரை பூஜைகள், அபிஷேகங்கள் இடம்பெற்று தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவுபெறவுள்ளது.

**படங்கள்:** திருக்கோவில் மேலதிக செய்தியாளர்

# அப்துல்லாஹ் ரஹ்மானியின் 7ஆவது வருட ஞாபகார்த்த நிகழ்வு



*மாளிகைக்காடு செய்தியாளர்*

“ஷைகுல் பலாஹ்” மர்ஹும் அப்துல்லாஹ் ரஹ்மானியின் 7ஆவது வருட ஞாபகார்த்த நிகழ்வும் மர்ஹும் மௌலவி ஆதம்லெவ்வை ஹஸரத் பற்றியும் நினைவுரை நிகழ்வும் காத்தான்குடி ஜாமியதுல் பலாஹ் அரபுக் கல்லூரி மண்டபத்தில் சனிக்கிழமை(29) நடைபெற்றது.

காத்தான்குடி ஜாமியத்துல் பலாஹ் அரபுக் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் மற்றும் ஜம்இய்யத்துல் பலாஹ் அரபுக் கல்லூரி நிர்வாக சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் பழைய மாணவர் சங்கத் தலைவர் மௌலவி அப்துல் அஸீஸ் (பலாஹி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஷைகுல் பலாஹ் மர்ஹும் அப்துல்லாஹ் ரஹ்மானி ஹஸரத் பற்றிய நினைவுரையை அஷ்-ஷெய்க் ஜலீல் மதனியும் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் மர்ஹும் ஆதம் லெவ்வை ஹஸ்ரத் பற்றிய நினைவுரையை கல்லூரியின் இயக்குனர் சபைச் செயலாளர் மௌலவி எம்.எச்.எம்.புகாரி (பலாஹி) ஆகியோர் நிகழ்த்தினர்.

இதன்போது கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், காத்தான்குடி நகர சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்பர், கல்லூரி அதிபர் எம்.ஏ.எம்.ரஹ்மத்துல்லாஹ் (பலாஹி), பிரதி அதிபர் எஸ்.எம்.அலியார் (பலாஹி) உட்பட விரிவுரையாளர்கள், நிர்வாகிகள், பழைய மாணவர்கள், உலமாக்கள், பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள் eastthamilan@gmail.com

# பேராசிரியர் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ்: வாழ்வும் பணியும்!

*நூருல் ஹுதா உமர்*

**‘பேராசிரியர் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ்: வாழ்வும் பணியும்’ எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவையின் ஏற்பாட்டில் இன்று திங்கட்கிழமை (31), இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெறுகிறது. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸிலின் இந்நூல் குறித்த அறிமுகக் குறிப்பு**

பேராசிரியர் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் இன்று நம்மிடையே இல்லை. ஆனால், அவர் ஆற்றியுள்ள கல்விச் சேவைகளும் சமூகத்தை மையப்படுத்திய அவரது ஆய்வுப் பணிகளும் எமது மனதைவிட்டகலாதவை. அவர் அடிப்படையில் ஒரு புவியியலாளர். சமூகத்துக்கான விடிவு பற்றிய சிந்தனைகளுடன் வாழ்ந்தவர். அதற்காக பல்வேறு பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகங் கொடுத்தார். தடைகளுக்கு அஞ்சாத மனவுறுதி ஹஸ்புல்லாஹ்வுக்கு இருந்தது(அனஸ், 2023). அதன்படி பின்வரும் இக்கட்டுரையானது பேராசிரியர் ஹஸ்புல்லாஹ்வின் வாழ்வு மற்றும் பணி பற்றி பதிவு செய்கிறது.

## பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ்வின் சமூக மற்றும் உயர்கல்விப் பங்களிப்புகள்

இந்த நூல் பேராசிரியரின் வாழ்வையும் பணியையும் அவரோடிருந்தவர்கள் வெளிப்படுத்துவதை பேசுகிறது. பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் ஓரிடத்தில் நிலையாக இருந்தவர் அல்ல. அவரைப் பற்றி சொல்கின்றவர்கள், ‘அவர் ஓடித் திரிந்தவர்’ என்றுதான் சொல்கிறார்கள். அந்தளவுக்கு ஆய்வுலகில் அவர் சஞ்சரித்தார். அதுவும் குறிப்பாக, வடபுலத்து முஸ்லிம்களுக்கு நிகழ்ந்த அந்தக் கொடூரத்துக்குப் பின்னர் அவரது ஓட்டம் மிக வேகமானது. அந்த மக்களின் துயரங்களை ஆற்றுவதில் அவர் மிகுந்த கரிசனை கொண்டிருந்தார். அவர்களின் ஆண்டாண்டு கால இருப்பை நிறுவுவதில் மிகப் பிரயத்தனங்களைச் செய்தார். அவர் இறுதி வரை இந்தப் பல்கலைக்கழக உலகில் நேர்மையாக இருந்ததற்கு சாட்சி, யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பேரவையில் அவர் நியமனம் பெற்றமையாகும். அந்தப் பயணத்திலேதான் அவரது இறுதிப் பயணம் நிச்சயப்படுத்தப்பட்டிருந்தது. ஆகவேதான், இலங்கை முஸ்லிம்களின் கல்வியியலாளரான அவர் வடபுலத்து சமூகத்துக்காக வாழ்ந்து மறைந்தார் என்பது முற்றிலும் பொருந்தும் என நினைக்கிறேன்.

இந்நூலின் கட்டுரையாளர்களாக எம்.எஸ்.அஸீஸ், பேராசிரியர் எம்.ஏ.நுஃமான், பேராசிரியர் பி.ஏ.ஹுஸைன்மியா, பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ், பேராசிரியர் எம்.எஸ்.எம்.ஜலால்தீன், பேராசிரியர் எம்.பி.எம்.இஸ்மாயில், பேராசிரியர் எம்.எம்.பாஸில், கலாநிதி எம்.வை.எம்.சித்தீக், சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.ஜே.எல்.வஸீல், முன்னாள் இராஜதந்திரி ஏ.எல்.அப்துல் அஸீஸ், எஸ்.எச்.எம்.றிஸ்னி, எம்.அஜிவதீன் (பாராளுமன்றம்), எஸ்.எல்.மன்சூர், ஏ.ஆர்.ஜெஸ்மில், எம்.றயிசுத்தீன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

பேராசிரியரின் இளமைக்கால நிகழ்வுகளை வெளிப்படுத்துகின்ற கட்டுரையாக இந்நூலின் முதல் கட்டுரை அமைந்திருக்கின்றது. இந்தக்கட்டுரை இந்த நூலுக்குள்ளே நுழைகின்ற வாசகனுக்கு அவரது பின்புலம் குறித்த அறிமுகத்தை வழங்குகின்றது. இந்தத் தொகுதியினுடைய இரண்டாவது கட்டுரையும் மேலேயுள்ள அறிமுகத்தோடு சேர்த்துப்பார்க்கக்கூடிய இரு நண்பர்களுக்கிடையிலான நினைவுப்பகிர்வுகளைத் தருவதோடு, ஹஸ்புல்லாஹ்வின் ஆய்வு செயன்முறைகள் குறித்த விவகாரத்தையும் துவக்குகின்றது. அந்தவகையில், இந்த இரண்டு கட்டுரைகளும் ஹஸ்புல்லாஹ் குறித்த அறிமுகத்தையும் அவரது ஆய்வியல்சார் அறிவையும் தருகின்றன.

மூன்றாவது கட்டுரையாளர், பேராசிரியர் ஹஸ்புல்லாஹ்வின் கல்வியியல் வாழ்க்கையையும் அவரது அடைவுகளையும் மாத்திரமல்லாது, கட்டுரையாளருக்கும் பேராசிரியருக்கும் இடையிலான மிக நீண்ட, நெருக்கமான உறவையும் வெளிப்படுத்திக் காட்டுகின்றார். அந்தவகையில், இருவருக்குமிடையிலான தொடர்பை நண்பர்களாக, சக ஊழியர்களாக, சமூகப் பணியாளர்களாக மற்றும் ஆய்வாளர்களாகப் பணியாற்றிய விதத்தை மிகத் தெளிவாகப் பதிவு செய்திருக்கிறார்.

நான்காவது கட்டுரை,







‘பேராசிரியர் ஹஸ்புல்லாஹ்வின் ஆய்வு முயற்சிகளும் சமூக நல்லிணக்கத்துக்கான முன்மொழிவுகளும்’ எனும் தலைப்பினாலானது. ஹஸ்புல்லாஹ்வின் ஆய்வியல் ரீதியான முயற்சிகள் குறித்து கோடிட்டுக் காட்டுகின்ற இக்கட்டுரை, ஹஸ்புல்லாஹ்வின் பங்களிப்பான நவீன சிந்தனைகளை சமூக மட்டத்தில் அறிமுகப்படுத்துவதில் அவருக்கு இருந்த ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றது. வட மாகாண முஸ்லிம்களின் வெளியேற்றம், மீள் குடியேற்றம், அம்மக்கள் எதிர்நோக்கிய பல்வேறு நெருக்கடிகள், இலங்கையின் இன மோதல், சமய உள்ளகப் பிரச்சினை என்ற அடிப்படையில் அவருடைய ஆய்வு ஈடுபாட்டை மிகத் தெளிவாகப் புலப்படுத்துகின்ற ஒரு நீண்ட கட்டுரையாகும்.

ஐந்தாவது கட்டுரை, ஹஸ்புல்லாஹ்வின் பன்மைத்துவ அறிவு, அவரது குடும்ப உறவு, சர்வதேச பயணங்களின் போது அவர் எதிர்கொண்ட இடையூறுகள், சமூக ஆய்வுகளுக்கான களப்பயணங்கள் போன்றவற்றைச் சுட்டி நிற்கின்றது. ஆறாவது கட்டுரை, அடிப்படையில் ஒரு சமூக விஞ்ஞானியாக விளங்கிய ஹஸ்புல்லாஹ் அத்துறையில் ஏறக்குறைய தனது முழு ஈடுபாட்டையும் காட்டியதுடன் சமூக விஞ்ஞானங்களின் ஒவ்வொரு பிரிவிலும் இடம்பெற்ற நிகழ்வுகள் மற்றும் மாற்றங்கள் பற்றி கருத்துக்கூறும் புலமை வாய்ந்த ஒருவராக தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தார் என்பதனை வெளிக்கொணருகிறது.

அடுத்த கட்டுரை, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இளம் விரிவுரையாளர்களை சர்வதேச கல்வியியலாளர்களுடன் உரையாட வைக்கவும் அனுபவங்களைப் பகிரவும் அவர் வழிவகைகளை செய்து கொடுத்த விதத்தை சிலாகித்துப் பேசுகிறது. இது பிரித்தானிய எடின்பேக் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜொனதான் ஸ்பென்சர், லண்டன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜொனதான் குட் ஹேன்ட், பிரித்தானியாவின் பாத் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி ஒலிவர் வோல்டன், அவுஸ்திரேலியாவின் மெல்பேன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பாட் கிளம் முதலானவர்களையும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு அழைத்து வந்து அவர் ஆய்வு ரீதியான இடைவினையை ஏற்படுத்தியிருந்தமையை சுட்டிக்காட்டுகிறது. அந்த நிகழ்வுகள் எம்மவர்களுக்கு பல அனுபவங்களைத் தந்திருக்கின்றன, பலவற்றை சிந்திக்கத் தூண்டியிருக்கின்றன, எழுதுவதற்கான ஆற்றலை தந்திருக்கின்றன. இவையெல்லாம் பேராசிரியர் ஹஸ்புல்லாஹ்வின் மிகப் பெரிய பணிகளாகும்.

எட்டாவது கட்டுரை, பேராசிரியருடனான கட்டுரையாளரின் உறவு 1980 களில் ஆரம்பமானது முதல் பிரித்தானியாவில் சந்திக்க முடியாமல் போனமை போன்றவற்றை உருக்கமாக எழுத்துருப்படுத்தியுள்ளது. அத்துடன், பேராசிரியரின் வெளிநாட்டுக் கல்வி, அவரது ஆய்வுப்புலமை என்பன பற்றியும் அழகுற பதிவு செய்திருக்கிறது. முஸ்லிம்களின் அமைவிட புவியியல், அவரது வெளிநாட்டுப் பயணங்கள், ஹஸ்புல்லாஹ்வும் வடமாகாண முஸ்லிம்களும் முதலான விடயங்களை விபரிக்கின்ற மற்றும் பல கட்டுரைகள் இந்நூலிலே உள்ளன. மேலும், முஸ்லிம் சமூகம் குறித்த பேராசிரியரின் அபிலாஷைகள் குறித்து பல வகைகளில் நோக்குகின்ற ஒரு கட்டுரையும் இந்நூலில் முக்கியம் பெறுகின்றது. மற்றைய கட்டுரை, பேராசிரியர் ஓர் ஆசானாக இருந்து ஆய்வுப் பணிபுரிந்து தன்னையும் அதன் வழிப்படுத்தினார் என்பதை கட்டுரையாளர் பதிவு செய்வதாக உள்ளது. பேராசிரியர் மறைந்து 04 ஆண்டுகள் நிறைவு பெறுவதை, அவருடனான தனது நட்பு அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு அடுத்த கட்டுரையாளர் பல முக்கியமான விடயங்களைத் தந்திருக்கிறார். இறுதியாக, ‘நமது மக்களுக்கான கடமையை நாம் செய்து கொண்டுதான் இருக்கிறோம். எங்கும் சென்று ஒழித்துக்கொள்ளவில்லை’ எனும் தலைப்பில் ‘பெருவெழி’ இதழில் பிரசுரமான பேராசிரியருடனான நேர்காணல் இத்தொகுதியில் இணைக்கப்பட்டிருப்பது மிகுந்த கவனத்தைப் பெறுகிறது.

இவ்வாறு பேராசிரியர் ஹஸ்புல்லாஹ்வின் வாழ்வையும் பணியையும் பல்வேறு கோணங்களில் பார்க்கின்ற இத்தொகுதி, நமது மக்களின் வாழ்வை சீர்மைப்படுத்தவும் மகிழ்ச்சிப்படுத்தவும் உதவும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. ஏனென்றால், இத்தொகுதியில் உள்ள ஒவ்வொரு கட்டுரையும் அவரது சமூகம் சார் மற்றும் உயர்கல்விக்கான அவரது பங்களிப்புகளின் உண்மை நிலையை பிரதிபலிப்பதாக அமைவதனாலாகும்.

இந்தக் கட்டுரைகளின் உள்ளடக்கங்கள் தற்கால, எதிர்கால சந்ததியினரின் கலந்துரையாடலுக்கு கொண்டுவரப்பட வேண்டும். இவரது பணிகள் குறித்த கருத்தாடல்கள் எமது சந்ததியினரின் மத்தியில் பரப்பப்படுமாயின் எதிர்காலத்தில் ஆற்றல்மிகு கல்விச் சமூகத்தை உருவாக்க முடியும். தற்காலத்தில் முஸ்லிம்களின் உயர்கல்வி வளர்ச்சியில் மட்டுமல்லாது, சமூகப் பணிகளிலும் காத்திரமாக தம்மை அர்ப்பணித்தவர் பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் என்ற செய்தியை இந்நூல் எடுத்துரைக்கிறது. இவ்வாறு ஒரு தகைசார் ஆளுமையின் வாழ்வையும் பணியையும் கலந்துரையாடலுக்கு கொண்டுவர வழிவகுக்கும் ஆவணம் ஒன்றை வழங்கிய கட்டுரையாளர்களுக்கும் இந்தத் தொகுப்பு முயற்சியை மேற்கொண்ட கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவைக்கும் மிக்க நன்றி.

# சாய்ந்தமருதில் நாடகப் பயிற்சிப் பட்டறை



மாளிகைக்காடு,பொலிவேரியன் செய்தியாளர்கள்

கலாசார அலுவலர்கள் திணைக்களத்தின் தொளஸ் மக பக வேலைத்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகப் பயிற்சிப் பட்டறை சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் வெள்ளிக்கிழமை(28) இடம் பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபீகாவின் ஒருங்கிணைப்பில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வளவாளர்களாக முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரியும் ஓய்வு பெற்ற அதிபருமான ஏ.பீர் முஹம்மட் மற்றும் கலைஞர் அஸ்வான் மௌலானா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்சான், சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய அதிபர் எம்.சி.றிப்கா அன்சார், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ்.சுரேஷ்குமார், அபிவிருத்தி உத்தியோகத்தர் மாஜிதா உட்பட உயர்தர மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



**பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கோமாரி கமநல சேவை நிலையத்தின் தகறாம்பளை கண்டத்துக்கு உள்ளடங்கிய வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள விவசாயக் காணிகளை விடுவித்துத் தரும்படி அட்டாளைச்சேனை ஸம்ஸம் மேட்டு நிலப் பயிர் உற்பத்தி சங்கத்தின் சார்பில் அதன் உறுப்பினரும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தருமான சபானா அபூபக்கர் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரபிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தார். இதன்போது ஊடக இணைப்பாளர் ஊடகவியலாளர் எஸ்.எம்.அரூஸும் கலந்து கொண்டிருந்தார்.**

**படம்:** *மீரா நகர் செய்தியாளர்*

# 30ஏக்கரில் தீப்பரவல்



திருமலை மேலதிக செய்தியாளர்

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நான்காம் கட்டைப் பிரதேசத்தில் ஏற்பட்ட திடீர் தீப்பரவல் காரணமாக சுமார் 30 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பு தீக்கிரையானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சனிக்கிழமை (29) நண்பகல் குறித்த பிரதேசத்தில் குடியிருப்புகள் மற்றும் பாடசாலையை அண்மித்த வனப்பகுதியிலேயே திடீரென இத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

குறித்த வனப்பகுதி ஆண்டாங்குளம் பிரதேசத்தில் இருந்து நான்காம் கட்டை வரை சுமார் 30 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு இவ்வாறு தீக்கிரையானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. திருகோணமலை மாநகர சபையின் தீயணைப்பு படை மற்றும் இராணுவத்தினருடன் இணைந்து பொதுமக்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் குறித்த தீப்பரவல் தொடர்பில் திருகோணமலை உப்புவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை யும் குறிப்பிடத்தக்கது.

# வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை 40ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு







கனகராசாசரவணன், வாழைச்சேனை, களுதாவளை செய்தியாளர்கள்

ஜூலைக் கலவரத்தின் ஓர் அங்கமாக இடம்பெற்ற வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் முன்னாள் தலைவர்களான குட்டிமணி, தங்கதுரை உட்பட 53 போராளிகளின் நினைவான தமிழ்த் தேசிய வீரர்கள் தினத்தின் 40ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு சனிக்கிழமை(29) மாலை இடம்பெற்றது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரன் தலைமையில் மட்டக்களப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், கட்சியின் உபதலைவர் இந்திரகுமார் பிரசன்னா, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உபதலைவர் இரா.துரைரெட்ணம், மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகரசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தவிசாளர்கள் உள்ளிட்ட முன்னாள் பிரதிநிதிகள், கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கட்சியின் தலைவர் மற்றும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உபதலைவர் ஆகியோரால் குட்டிமணி, தங்கதுரை ஆகியோரின் உருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதுடன், அனைவராலும் மலர்தூவி ஈகைச் சுடரேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அலிக்கம்பை கிராமத்துக்கு குடிநீர் இணைப்பு பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு



ஆலையடிவேம்பு செய்தியாளர்

குடியேற்றம் இடம்பெற்ற காலம் முதல் இன்று வரை பலவருடகாலமாக குடிநீர்ப்பிரச்சினையை எதிர்நோக்கி வந்த அம்பாறை, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவின் பழம்பெரும் கிராமமான அலிக்கம்பை கிராமத்துக்கு குடிநீர் இணைப்பு பெற்றுக்கொடுக்கும் பரீட்சார்த்த நிகழ்வு சனிக்கிழமை(29) இடம்பெற்றது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஒத்துழைப்போடு, எகெட் கரிதாஸ் நிறுவனத்தின் அனுசரணையோடு, வின்சென்றி போல் சொசைட்டி உள்ளிட்ட பல்வேறு நிதி உதவியாளர்களின் பங்களிப்புடன் ஆலையடி வேம்பு பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையின் அனுமதியோடும் குடிநீர் இணைப்பு பெற்றுக்கொடுக்கும் ஆரம்ப நிகழ்வு அலிக்கம்பை புனித சவேரியர் தேவாலய பங்குத்தந்தை அருட்திரு மில்பர் வாஸ் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் நிதிப்பங்களிப்பை வழங்கியவர்களின் சார்பில் ஜெராஜ் சிட்டி கலந்து கொண்டதுடன் எகெட் நிறுவனத்தின் மட்டக் களப்பு மறைமாவட்ட இயக்குனர் அருட்தந்தை ஜேசுதாசன் மற்றும் அலிக் கம்பை சென்.செவேரியர் தேவாலய உதவிப் பங்குத் தந்தை டெஸ்மன்ராஜ் உள்ளிட் டவர்கள் கலந்து கொண் டனர்.

குடிநீர் இணைப்பு பெற்றுக் கொடுக்கும் பரீட்சார்த்த ஆரம்ப நிகழ்வுக்கு வருகை தந்த அதிதிகளுக்கு மக்கள் அமோக வரவேற்பளித்தனர். இதன் பிற்பாடு ஆசீர்வாத பூஜையும் நன்றி கூறும் நிகழ்வும் இடம்பெற்றன.

தொடர்ந்து நிதிப்பங்களிப்பை வழங்கியவர்களின் சார்பில் ஜெராஜ் சிட்டி கலந்துகொண்டு குடிநீர் இணைப்பை ஆரம்பித்து வைத்தார். குறித்த கிராமத்தில் வசித்து வரும் 360 குடும்பங்களும் ஆற்று நீர் மற்றும் வாய்க்கால் மூலமாக கிடைக்கும் நீரை ஆரம்ப காலத்தில் பயன்படுத்தி வந்தனர். பின்னர் பிரதேச சபையின் மூலமும் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் மூலமும் கிடைக்கப்பெற்ற நீரைப் பயன்படுத்தினர்.

ஆயினும், குடியேற்ற காலத்தின் பின்னர் முதல் முறையாக குடிநீர் வடிகாலமைப்புச் சபையின் குடிநீர் இணைப்பைப் பெற்றுக்கொண்டமையையிட்டு மகிழ்ச்சி வெளியிட்டனர்.

அதேநேரம், இதற்கான நிதி அனுசரணையாளர்கள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன், பிரதேச சபைச் செயலாளர் சுரேஸ்ராம் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கந்தளாயில் வேளாண்மை அறுவடைகள் ஆரம்பம்

கந்தளாய் செய்தியாளர்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட பேரமடு பகுதியில் நெற்செய்கை பண்ணப்பட்ட 800 ஏக்கர் வேளாண்மை அறுவடை நடவடிக்கைகள் ஞாயிற்றுக்கிழமை(30) ஆரம்பித்து வைக்கப் பட்டன.

பேரமடு குளத்தின் நீரைப் பயன்படுத்தி இம்முறை முதல் தடவையாக அதிகளவிலான ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட நெற் செய்கைகளின் அறுவடை செயற்பாடுகளே இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கடந்த காலங்களில் 150 ஏக்கர் நிலப்பரப்பில் வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. கடந்த வருடம் குளத்தை அபிவிருத்தி செய்தபின்னர் முதல் முறையாக 800 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மை அறுவடைகள் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெற்செய்கை அறுவடை நடவடிக்கையை கிழக்கு மாகாண நீர்ப்பாசன பொறியியலாளர் அப்துல் ஜப்பார் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர், அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# தண்ணீர் பவுசரில் சிக்கி 06 வயது சிறுவன் பலி

வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்

வாகரை றிதிதென்னை புதிய கிராமப் பகுதியில் தண்ணீர் பவுசரில் சிக்கி சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் இதனால் ஆத்திரமடைந்த பிரதேசவாசிகள் தண்ணீர் பவுசரை தீயிட்டுக் கொளுத்திய சம்பவம் சனிக்கிழமை(29) இடம்பெற்றுள்ளதாகவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

றிதிதென்னை புதிய கிராமத்தைச் சேர்ந்த முகம்மது ருஷ்த்திக் (வயது06) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தனியார் வகுப்புக்குச் சென்று தமது சகோதரனுடன் துவிச்சக்கர வண்டியில் வரும்போது இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

முன்னே சென்ற பவுசர் திடீரென பின்னால் வந்ததால் அதில் துவிச்சக்கரவண்டி மோதி பவுசரின் பின் பகுதியில் சிறுவர்கள் இருவரும் அகப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். மற்றையவர் காப்பாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஆத்திரமடைந்த பிரதேசவாசிகள் வாகனத்தைக் கொளுத்தியதுடன் அதில் பயணம் செய்தவர்களையும் தாக்க முற்பட்டபோது அவர்கள் தப்பியோடியுள்ளனர். பின்னர் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று கலவரம் இடம்பெறாமல் தடுத்ததுடன் பவுசர் சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த பகுதியின் அருகிலுள்ள குளம் ஒன்றிலிருந்து மண் அகழப்பட்டு தென் பகுதிக்கு கொண்டு செல்லும் நடவடிக்கையானது இடம்பெற்று வருவதாகவும் கனரக வாகனங்கள் இவ் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதனால் வீதியில் புழுதி பரவல் இதன் காரணமாக இடம்பெறுவதனால் பொதுமக்களுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியிருந்தது. குறித்த பிரதேசத்தின் புழுதி பரவாமல் தடுக்கும் நடவடிக்கையில் தண்ணீர் இறைக்கும் பவுசர் கடமையில் ஈடுபட்டிருந்தது.

இதன்போதே இவ் விபத்து இடம் பெற்றுள்ளமை பிரதேசத்தில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 50 மில்லியன் செலவில் வெருகல் கட்டையாறு பாலம் புனரமைப்பு

கந்தளாய் செய்தியாளர்

திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேச செயலகப் பிரிவில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் சுமார் 50 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் கட்டையாறு பாலத்துக்கான கள விஜயத்தை இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் சனிக்கிழமை(29) முன்னெடுத்திருந்தார்.

குறித்த பாலமானது விவசாயிகள் பயன்படுத்தும் அத்தியாவசியமான பாலமாகக் கருதப்பட்டபோதிலும் மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருந்த நிலையில், அக் கிராம மக்களும் விவசாய அமைப்புகளும் இராஜாங்க அமைச்சரிடம் முன்வைத்த கோரிக்கைக்கமைவாக இராஜாங்க அமைச்சின் நிதியொதுக்கீட்டில் சுமார் 50 மில்லியன் ரூபா செலவில் கடந்த மே மாதம் அளவில் குறித்த பாலத்துக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மேற்படி பாலம் முழுமையடையும் பட்சத்தில் அதனைச் சூழவுள்ள சுமார் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாய செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் மற்றும் அதனூடாக பயணம் செய்யும் பொதுமக்கள் என அனைவரும் நன்மையடையவுள்ளனர்.

இவ்விஜயத்தின் போது பாலத்தின் கட்டுமானப் பணிகள் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் பொறியியலாளரிடம் விபரங்களைக் கேட்டறிந்தார். இதன்போது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன், மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் நவரெத்தினம் திருநாவுக்கரசு, பிரதம பொருளாளர் ஆறுமுகம் தேவராஜ், திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் மார்க்கண்டு ரங்கன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# பௌத்த பிக்கு இனங்களுக்கிடையே இனமுறுகலை ஏற்படுத்தி வருகிறார்

## பதவிஸ்ரீபுர பிரதேச சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

அப்துல்சலாம் யாசீம்

புல்மோட்டை அரிசிமலை பௌத்த பிக்கு இனங்களுக்கிடையே இனமுறுகலை ஏற்படுத்தி வருவதாக பதவிஸ்ரீ புர பிரதேச சபை உறுப்பினர் அகில பிரபாத் வீரசூரிய குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரிசிமலை விகாரையின் விகாராதிபதியாக கடமையாற்றி வரும் பனாமுர திலகவன்ச பௌத்த பிக்கு யுத்த காலத்தின் பின்னர் இங்கு வருகை தந்ததாகவும் திருகோணமலை மாவட்டத்தில் இன முறுகலை ஏற்படுத்தி இதுவரைக்கும் 6,000க்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகளை தம்வசம் வைத்திருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சமூகங்களுக்கிடையில் இன முறுகலை ஏற்படுத்தி அரச அதிகாரிகளைப் பயன்படுத்தி அவருடைய கெடுபிடி வேலைகளை முன்னெடுத்து வரும் அவர், தென்னமரவாடி மற்றும் சிங்கபுர மக்களின் 162 ஏக்கர் காணியை பூஜா பூமி எனக் கூறி மோசடி செய்து வருவதாகவும் அப்பாவி மக்களுடைய அக்காணிகளை மீள அவர்களுக்கே வழங்கவேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த பௌத்த பிக்கு சங்கமலை என்ற பகுதியை ஆக்கிரமித்து ஆவணங்கள் இருக்கின்ற காணிகளை தமது காணி எனக் கூறி மக்களைப் பயமுறுத்தி இன முறுகலை ஏற்படுத்துவதே இவருடைய செயற்பாடாக இருக்கின்றது - என்றார்.

# மட்டுவில் 06 மாதங்களில் ஒன்பது பேர் தற்கொலை

கனகராசா சரவணன் ,கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி, கொக்குவில் ஆகிய இரு பொலிஸ் பிரிவுகளில் இரு முதியவர்கள் வெள்ளிக்கிழமை (28) தற்கொலை செய்துள்ளனர்.

வெல்லாவெளி பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள மண்டூர் பிரதேசத்தில் 81 வயதுடைய பெண் ஒருவரும் கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள சவுக்கடி பிரதேச கடலில் 64 வயதுடைய ஆண் ஒருவரும் தற்கொலை செய்து கொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனவரி தொடக்கம் ஜூன் மாதம் வரையிலான 06 மாத காலப்பகுதியில் நான்கு சிறுவர்கள் உட்பட 79 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

இதில், காத்தான்குடி பொலிஸ் பிரிவில் 09 பேரும் மட்டக்களப்பு பொலிஸ் பிரிவில் 10 பேரும் வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் 10 பேரும் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் 13 பேரும் தற்கொலை செய்துகொண்டுள்ளதுடன், ஜூலை முதலாம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 08 பேர் தற்கொலை செய்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 2022ஆம் ஆண்டில் 133 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். இவ்வாறான நிலையில், கடந்த 2022ஆம் ஆண்டின் புள்ளி விபரத்தையும் இந்த ஆண்டின் 06 மாத கால புள்ளிவிபரத்தையும் ஒப்பிடும்போது, தற்கொலைகள் அதிகரித்துள்ளதாக மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய புள்ளிவிபரம் தகவல் வெளியிட்டுள்ளது. எனவே, அதிகரித்து வரும் தற்கொலைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## போடியார் புலம்பல்!



***உண்மய கண்டறிய்யும் ஆணைக்குழு அவசியம் வேணுமாம் எண்டு அமைச்சர் அலி சப்பரி நானா சொல்லியிருக்காரு எலுவா..? பொய்யை கண்டறிய இனவாதிகள் ஆட்சி செய்யிற இலங்கை நாட்டில நல்லபூசாரிமார கொண்டு அஞ்சணம் போட்டு பார்த்தாலும் உண்மய கண்டறிகிறது கஷ்டம் நானா... சிலவேளைகளில் சவூதில இருக்கிற குத்து பக்கிரி காக்கா மார கொண்டுவந்து ஒள்ளுப்பம் முயற்சி பண்ணி பாருங்கள் சிலவேள 1990இல முஷ்லிம் ஊர்காவல் படய கொண்டு ஜனாதிபதி பிரமதாசா ஆட்சியில் நடந்த கொலைகளையாவது கண்டறியலாம் மினக்கட்டு பாருங்கள் நானா....!***

# சமஷ்டித் தீர்வை வலியுறுத்திய ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு

கந்தளாய் செய்தியாளர்

வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் தமிழ்பேசும் மக்களுக்குரிய நிரந்தர அரசியல் தீர்வான சமஷ்டியை வலியுறுத்தி இன்று திங்கட்கிழமை (31) திருகோணமலை மாநகராட்சியை அண்மித்த பகுதியில் காலை 09.30 மணிமுதல் 11.00 மணிவரை அமைதியான முறையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. நிரந்தர அரசியல் தீர்வை நோக்கிய செயல்முனைவின் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு இன்றைய தினம் வட-கிழக்கு தழுவிய ரீதியில் இந்த ஜனநாயகப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு முன்வைத்த சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை உறுதிசெய்யக்கூடியதான போராட்டமாக இது அமையவுள்ளதாகவும் இப்போராட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கண்டுமணி லவகுகராசா அழைப்பு விடுத்துள்ளார்.



**குச்சவெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம சேவையாளர்கள் பிரிவில் இருந்து தற்பொழுது பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்ட 40 வறிய குடும்பங்களுக்கு ரூபா 15 ஆயிரம் பெறுமதியான பண வவுச்சர் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (28) இடம் பெற்றது. குச்சவெளி பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் கே.குணநாதன், திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் நாசிக் மற்றும் லீட்ஸ் நிறுவன உத்தியோகத்தர் ஏ.ஆர்.எம்.தஸ்லீம் ஆகியோரினால் குறித்த வவுச்சர்கள் வழங்கப் பட்டன.** **படம்:** *கிண்ணியா செய்தியாளர்*

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## திடீர் ஓய்வை அறிவித்த ப்ரோட்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான 37 வயதுடைய ஸ்டுவர்ட் ப்ரோட் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். தற்போது நடைபெற்றுவரும் ஆஷஸ் தொடரின் ஐந்தாவது போட்டியுடன் அவர் விடைபெறுகிறார்.

மூத்த வீரரான ஜேம்ஸ் அண்டர்சன் (41 வயது) ஓய்வு பெறுவதாக தகவல் வெளியானதை அவர் அதிரடியாக மறுத்த நிலையில், யாரும் எதிர்பாராத விதமாக ப்ரோட் இந்த அறிவிப்பை வெளியிட்டார். டெஸ்ட் கிரிக்கெட்டில் 602 விக்கெட்டுகள் வீழ்த்திய ப்ரோட், ஒருநாள் போட்டியில் 178 விக்கெட்டுகளும் டி20 போட்டியில் 65 விக்கெட்டுகளும் வீழ்த்தியிருக்கிறார்.

2010ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில், ஸ்டுவர்ட் ப்ரோட் 09ஆவது விக்கெட்டில் களமிறங்கி 169 ஓட்டங்கள் விளாசி மிரட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வலைப்பந்தாட்ட உலகக்கிண்ணம் - 2023
## அடுத்தடுத்து படுதோல்விகளை சந்தித்த இலங்கை



தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் வலைப்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் குழு சியில் இடம்பெற்றுள்ள இலங்கை அணி தங்களுடைய முதல் போட்டியில் ஜமைக்கா அணியிடம் 105-25 என்ற புள்ளிகள் கணக்கில் படுதோல்வியை சந்தித்திருந்த நிலையில், தங்களது இரண்டாவது ஆட்டத்தில் நேற்று முன்தினம் தென்னாபிரிக்க அணியிடமும் 87 - 32 என்ற புள்ளிகள் கணக்கில் படுதோல்வியடைந்தது.

முதல் ஆட்டத்தில் ஜமைக்கா அணி 2ஆவது தடவையாக தங்களுடைய 100 புள்ளிகள் என்ற மைல்கல்லை வலைப்பந்தாட்ட உலகக்கிண்ணத்தில் பதிவுசெய்தது. அதுமாத்திரமின்றி, 60 வருட உலகக்கிண்ண வலைப்பந்தாட்ட வரலாற்றில் 14ஆவது தடவையாக 100 புள்ளிகள் என்ற மைல்கள் எட்டப்பட்டுள்ளன.

இலங்கை அணி தங்களுடைய இறுதி லீக் போட்டியில் வேல்ட் அணியை நேற்று இரவு எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுத் துளிகள்

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் 05 அணிகள் பங்கேற்கும் நான்காவது பருவகாலத்துக்கான லங்கா ப்ரீமியர் லீக் தொடர் நேற்று கோலாகலமாக ஆரம்பமானது. கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் ஜவ்னா கிங்ஸ் - கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணிகள் மோதின. இந்த தொடர் ஓகஸ்ட் 20ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. முதல் 03 தொடர்களிலும் ஜவ்னா கிங்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

★★★★★★★★★★

இந்தியாவில் ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி. உலகக்கிண்ண தொடருக்கான டிக்கெட் விற்பனை ஓகஸ்ட் 10ஆம் திகதி தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒன்லைனில் டிக்கெட் விற்பனை தொடங்கப்பட்டாலும் பின்னர் போட்டி நடப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்பாக நேரடி டிக்கெட்டும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் போட்டி நடத்தும் மாநில கிரிக்கெட் சங்கங்கள் 40 டிக்கெட்டை வாங்குவதற்கும் 10 சதவிகித டிக்கெட்டுகளை ஐ.சி.சி. டூர் பார்ட்னர்களும் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. லீக் போட்டிகளுக்கு ஐ.சி.சி. நிர்வாகத்துக்கு மாநில கிரிக்கெட் சங்கங்கள் தரப்பில் 1295 டிக்கெட்டுகளும் இந்திய அணி மற்றும் அரையிறுதி போட்டிகளுக்கு 1355 டிக்கெட்டுகளும் வழங்கப்படவுள்ளது.

★★★★★★★★★★

இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 06 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. முதல் ஆட்டத்தில் இந்திய அணி அபார வெற்றியீட்டிய நிலையில் தொடர் தற்போது 1-1 என்ற அடிப்படையில் சமநிலை பெற்றுள்ளது. தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கும் இறுதி ஆட்டம் நாளை நடைபெறுகிறது.

★★★★★★★★★★

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நேற்று நிறைவுக்குவந்த 101ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பின் இரண்டாம் நாளான சனிக்கிழமை ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் காலிங்க குமாரகே தூரத்தை 45.07 செக்கன்களில் நிறைவு செய்து போட்டி சாதனையை நிலைநாட்டினார். அவரது தனிப்பட்ட அதிசிறந்த நேரப் பெறுதியாகும்.

★★★★★★★★★★

இதேவேளை முதல் நாளான வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ். வீரர் அருந்தவராசா புவிதரன் வெண்கலப் பதக்கம் வென்று அசத்தினார். இலங்கை வீரர் இஷார சந்தருவன் மற்றும் இந்திய வீரர் சிவ சுபர்மணி மற்றும் யாழ். வீரர் புவிதரன் ஆகிய மூவரும் முறையே 4.90 மீற்றர் உயரத்தைத் தாவி முதல் மூன்று இடங்களைப் பிடித்தனர்.

## இன உறவை கட்டியெழுப்பும் நோக்கில் சிறுவர் விளையாட்டு விழா



பேருவளை நிருபர்

களுத்துறை மாவட்டத்தில் உள்ள வெலிப்பன்னை பகுதியில் உள்ள சிறுவர் கழகங்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் சிறுவர் விளையாட்டு விழா அண்மையில் வெலிப்பன்னை ரஹ்மானிய்யா மகா வித்தியாலய விளையாட்டரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

வெலிப்பன்னை பகுதியில் இன உறவை கட்டியெழுப்பும் நோக்கில் ''போதையிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்போம்'' எனும் தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் விழாவில் 500க்கும் மேற்பட்ட சிறார்கள் பங்குபற்றினர். பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளோடு கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பரிசளிப்பு விழாவில் தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். ரஹ்மானிய்யா மகா வித்தியாலய அதிபர் அப்துர் ரஹ்மான் முஹம்மத் நவ்மான், மத்துகமை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் முஹம்மத் ரம்ஜான் ஹமீத், மத்துகமை திடீர் மரண விசாரணை அதிகாரி நிஹால், வெலிப்பன்னை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட பள்ளிவாசல் நிர்வாகிகள், அரச ஊழியர்கள் எனப் பலரும் விழாவில் பங்குபற்றினர்.

## அக்கரைப்பற்று அஸ்-ஸிறாஜ் மகா வித்தியாலய உத்தியோகத்தர்கள் அணி வெற்றி



மீரா நகர் செய்தியாளர்

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்குட்பட்ட அஸ்-ஸிறாஜ் மகா வித்தியாலய உத்தியோகத்தர்கள் மற்றும் அல்-முனவ்வரா கனிஷ்ட வித்தியாலய உத்தியோகத்தர்களுக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் போட்டியில் அக்கரைப்பற்று அஸ்-ஸிறாஜ் அணி அமோக வெற்றி பெற்றது.

அஸ்-ஸிறாஜ் மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் அக்கரைப்பற்று அஸ்-ஸிறாஜ் அணி 47 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லா வெற்றிக்கிண்ணத்தை அஸ்-ஸிறாஜ் அணியினருக்கு வழங்கி வைத்தார்.

## மெஸ்ஸியை விட்டுவிட்டு ரொனால்டோவை பச்சை குத்திய ஆர்ஜென்டினா வீராங்கனை

போர்த்துக்கல் நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோவை பச்சை குத்தியதற்காக அர்ஜென்டினாவைச் சேர்ந்த மகளிர் உதைபந்து வீராங்கனை யமிலா ரோட்ரிக்ஸ் சைபர் தாக்குதலுக்கு உள்ளானார்.

யாமிலா ரோட்ரிக்ஸ் தனது காலில் மறைந்த அர்ஜென்டினா ஜாம்பவான் டியாகோ மரடோனா மற்றும் ரொனால்டோவின் படங்களை பச்சை குத்தியுள்ளார்.



இது குறித்து பேசிய யாமிலா ரோட்ரிக்ஸ், தேசிய அணியில் மெஸ்ஸி எங்கள் கேப்டன், ஆனால் ரொனால்டோ எனது உத்வேகம் மற்றும் வழிபடும் உருவம் என்று நான் கூறுவதால், நான் மெஸ்ஸியை வெறுக்கிறேன் என்று அர்த்தம் இல்லை, என்று அவர் கூறினார்.

நான் எப்போது மெஸ்ஸிக்கு எதிரானவள் என்று சொன்னேன்? நான் சொல்லாத விடயங்களைச் சொல்வதை நிறுத்துங்கள், நான் மிகவும் கடினமான நேரத்தைச் சந்திக்கிறேன், நம் நாட்டு வீரர்களை மட்டுமே நாம் நேசிக்கவேண்டும் என்று எந்தச் சட்டமும் இல்லை என்று யமிலா கூறினார்.

**உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு செய்திகளை தமிழன் பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பினால், செய்தியை சுருக்காக எழுதி, உங்கள் பெயர், ஊர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு Thamilansports@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.**

## பயிற்சியின் போது சுருண்டு விழுந்த கொலம்பிய வீராங்கனை



மகளிர் பீபா உலகக்கிண்ண உதைபந்து தொடர் ஆஸி. மற்றும் நியூசிலாந்தில் நடைபெற்றுவரும் நிலையில் கொலம்பியாவின் உதைபந்து நட்சத்திரம் லிண்டா கைசெடோ பயிற்சியின் போது சுருண்டு விழுந்துள்ள நிலையில், இனி அவர் விளையாடும் வாய்ப்பு குறைவு என்றே கூறப்படுகிறது.

18 வயதேயான உதைபந்து நட்சத்திரம் லிண்டா கைசெடோ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் முன்னர் சுமார் 90 நொடிகள் வரையில் சுயநினைவற்ற நிலையில் இருந்துள்ளார். சிகிச்சைக்கு பின்னர், அதே நாளில் அவர் வைத்தியசாலையில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தாலும், ஞாயிறன்று ஜேர்மனிக்கு எதிரான போட்டியில் அவர் களமிறங்கவில்லை.

தமது சக வீரர்களுடன் பயிற்சியில் ஈடுபட்டிருந்த லிண்டா கைசெடோ, திடீரென்று பயிற்சியை நிறுத்தியவர், மார்பைப் பிடித்துக் கொண்டு தரையில் சரிந்துள்ளார். உடனடியாக அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல, செல்லும் வழியில் அவருக்கு நினைவு திரும்பியதாக கூறுகின்றனர்.

கொலம்பிய நம்பிக்கை நட்சத்திரமான லிண்டா கைசெடோ, 15 வயதில், அவருக்கு கருப்பை புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது, அந்த நோய் அவரது வாழ்க்கையை அழித்துவிடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. இதனையடுத்து அந்த கட்டியை அகற்ற அறுவை சிகிச்சை தேவைப் பட்டது. அவர் உதைபந்து களத்திற்கு திரும்புவதற்கு முன் ஆறு மாதங்கள் கீமோதெரபிக்கு உட்படுத்தப் பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

**LPL - 2023**
**இன்றைய போட்டிகள்**
**காலி எதிர் தம்புள்ள**
**பி.ப – 3.00**
**கண்டி எதிர் கொழும்பு**
**இரவு – 7.00**

## இராஜதந்திர... (04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், இன்று கடந்த காலத்தை திரும்பிப் பார்க்கிறபோது, இந்த கட்டத்தில்தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட தீர்மானித்தது. ஆனால், எங்களுக்கொரு பிரச்சினை இருந்தது. எங்களைக் கேட்காமல் வடகிழக்கு இணைவு நடந்துவிட்டது, அதனால் எங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டது. எனவே, இதை நாங்கள் அரசியல் மயப்படுத்தி மக்களைத்திரட்டவேண்டும். எனவே அதற்கு களமாக நாங்கள் இந்த தேர்தலைப் பயன்படுத்தவேண்டும் எனத் தீர்மானித்தோம்.

வடகிழக்கிலும் போட்டியிட்டோம் அந்த மாகாண சபைத் தேர்தலில் புலிகளின் அச்சுறுத்தலைத் தாண்டியும் போட்டியிட்டோம். அதில் மாகாண சபை உறுப்பினர்கள் இருவரைப் பலி கொடுத்தோம். நண்பர் அலி உதுமான், மன்சூர் என்ற மாகாண சபை உறுப்பினர்கள் இருவரை விடுதலைப் புலிகள் கொலைசெய்கின்ற அளவுக்கு அவர்களுடைய வக்கிரம் எங்களைப் பாதித்தது. இருந்தும் நாங்கள் பங்கேற்றதற்கான காரணம், அந்த களத்தை நாங்கள் கைவிடமுடியாது என்பதற்காகவாகும். அதனூடாக எமக்கு நடந்த, எங்களைக் கேட்காமல், எங்களோடு உடன்பாடில்லாமல் சில விடயங்கள் நடந்துவிட்டன என்கின்ற அந்த ஆதங்கத்தை உலகமயப்படுத்தவேண்டும் என்பதுதான் அதனுடைய அடிப்படை.

அதனுடன் சேர்த்து அன்றைய ஜனாதிபதித் தேர்தலில் தோற்பதற்கு இருந்த பிரேமதாசவை வெற்றிபெறச் செய்தோம். இறுதி நேரத்தில் சிறிமாவோ அம்மையாரின் அணியிலிருந்து விலகிப்போய் பிரேமதாசவிடம் நாங்கள் பேரம் பேசினோம். அதன்மூலமாக பாராளுமன்றத் தேர்தலின் 12 சதவீதமான வெட்டுப் புள்ளியை 5 சதவீதமாகக் குறைத்ததோடு சேர்த்து 19 கோரிக்கைகளையும் வென்றெடுத்தோம்.

இலகுவாக எங்களுடைய 19 கோரிக்கைகளைத் தந்த பிரேமதாச அரசு, தேர்தல் வெற்றிக்காக அவற்றை எங்களுக்கு வாரிவழங்கத் தயாராகவிருந்தது.

ஆனால் 1972ஆம் ஆண்டு அண்ணன் சிவா உட்பட தமிழர் விடுதலைக்காக இரண்டு எதிரும் புதிருமாக இருந்த தமிழ் காங்கிரஸும் தமிழரசுக் கட்சியும் இணைந்து தமிழர் கூட்டணி அமைத்தபோது அவர்களுடைய 09 அம்சக் கோரிக்கை பிறகு 06 அம்சமாகி அதைக் கொண்டுபோய் மக்களவையில் நிறைவேற்றப்படவிருந்த அரசியலமைப்பில் குறைந்தபட்சம் கொள்கை ரீதியாக சமஷ்டியை அங்கீகரியுங்கள் என்ற கோட்பாடுகள் உட்பட கேட்கப்பட்டதை தூக்கி எறிந்தது அன்றைய அரசு, தொடர்ச்சியாக அப்படியே தமிழ்த் தேசியப் பரப்பில் வன்முறை அரசியல் உருவாவதற்கு வித்திட்டது என்பது நாங்கள் எல்லோரும் இன்று கண்கூடாக பார்க்கின்ற விடயம்.

அதன் விளைவுதான் ஈற்றில் 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தோடு, இருந்த 17 உறுப்பினர்களோடு உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாக இருந்த தமிழரசுக் கட்சி நாட்டு பிரிவினைக்கு எதிராக, வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கமைவாக நாங்கள் சத்தியப்பிரமாணம் எடுப்பதில் அவர்களுக்கு ஏற்பட்ட சிக்கலின் காரணமாக அத்தனை உறுப்பினர்களும் பதவி துறந்தார்கள். அண்ணன் ஆனந்த சங்கரி உட்பட அண்ணன் சிவா அதனோடு சேர்த்து அன்றிலிருந்து அவருடைய இறுதி நாள் வரையும் 19 வருடங்கள் பாராளுமன்றத்தை எட்டிப்பார்க்கவில்லை. வாய்ப்புக்கிட்டவில்லை. அந்த 19 வருட இடைவெளியில் அவர் சும்மா வாளாவிருக்கவில்லை. சென்னையிலும் கொழும்பிலும் டெல்லியிலும் அண்ணன் சம்பந்தரோடு அண்ணன் சிவா, நீலன் திருச்செல்வம் உட்பட எத்தனையோ பேச்சுவார்த்தைகள். அவற்றின் விளைவுதான் 13ஆவது திருத்தச் சட்டம். அன்று பாதுகாப்பு அமைச்சராகவிருந்த சிதம்பரம், அன்னை இந்திராவின் தூதுவராக இங்கு வந்ததைத் தொடர்ந்து, பாத்தசாரதி வந்தார். அதற்குப் பிறகு 19 டிசம்பர் 1986ஆம் ஆண்டு அறிக்கை வந்தது. அந்த அறிக்கைக்கு அமைவாக வெறும் மாவட்டத்தைத்தான் தருவோம் என்றிருந்த இலங்கை அரசின் நிலை மாகாணத்தையும் சேர்த்து ஏன் தேவை ஏற்படுகிறபோது மாகாணங்களை ஒன்றாக இணைத்து தருவதற்கும் உடன்பாடு தருகின்ற அளவுக்கு அது வியாபிக்கின்ற அத்தனை வேலைப்பாடுகளுக்கும் அண்ணன் சிவாவுடைய பங்களிப்பும் பிரதானமானது என்பதை தமிழுலகம் இலகுவில் மறந்துவிடமுடியாது.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தானைத் தளபதியாக இருக்கின்ற அண்ணன் சம்பந்தன் உட்பட இங்கு மேடையில் இருக்கிற தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், காங்கிரஸின் முன்னாள் உறுப்பினர்கள் என்று இருக்கின்றவர்கள் எல்லோருமாக இந்த 13ஆவது திருத்தச் சட்டத்தின் வடிவாக்கத்தில் பங்காளிகளாக இருந்தார்கள் என்பதுதான் உண்மை. அதன் பின்னணியில்தான் ஜனாதிபதி இந்தியா போயிருக்கிறார்.

ஒரு தேர்தலை நடத்துவதற்கு முடியுமா, இல்லையா என்பதிலும் இழுத்தடிப்புச் செய்கிறார்.

எங்களைப் பொறுத்தமட்டில், இந்தப் பிரச்சினைகளுக்குள் மிக முக்கியமான விடயம், இன்று வடக்கும் கிழக்கும் பிரிந்ததாகவிருக்கலாம். ஆனால் 2008ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்துக்கு தனியாக தேர்தல் நடந்தபோது முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக பாராளுமன்றத்திலிருந்த நான், என்னுடைய பாராளுமன்ற ஆசனத்தைத் துறந்து கிழக்கில் போட்டியிடுவதற்குச் சென்றபோது, அந்த தேர்தலில் எங்களுக்கு தமிழரசுக் கட்சி உட்பட தமிழ் கூட்டணியின் உறுப்பினர்கள் மறைமுகமான அங்கீகாரத்தையும் ஆதரவையும் தந்தார்கள். அதன் பயனாக அமோகமான வெற்றியை நான் திருகோணமலையில் அடையக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் பாரிய தேர்தல் தில்லு முள்ளுகளுக்கு மத்தியில் எங்களுக்கு ஆட்சி அதிகாரம் கிட்டவில்லை என்றாலும், அடுத்த ஆட்சி அமைந்தபோது அதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் தருவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக அண்ணன் சம்பந்தன் மிகப் பாரிய தியாகத்தை எங்களுக்காக செய்தார். அதற்கு நான் நன்றி கூறவேண்டும்.

இந்த நட்புறவு நீடிக்கவேண்டும். தொடர்ந்தும் நாங்கள் தலைமைப் பதவிகளை பரிமாறிக் கொள்கிற உடன்பாடுகள் மூலம் இந்த வல்லுறு அரசியல் செய்கிற, இங்கு வக்கிரமாக எங்களுடைய பூமிகளைப் பறிக்கிற, எங்களுடைய தாயகத்தில் இப்படியான பெரிய குழப்பங்களை உருவாக்கிக் கொண்டு, இன்று குருந்தூர் மலையில் செய்கிற இந்தக் கூத்தைப்போல் பல நூறு இடங்களில் இன்று பிரச்சினைகள் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும் நிலையில், தமிழ் பேசும் சமூகங்கள் பேதங்களை மறந்து அண்ணன் சிவா என்கிற அந்த ஆலமரத்தின், தனிப்பெரும் ஆளுமையின் எந்த சமூகத்தின் அவலத்துக்காக தான் தன்னுடைய பிறந்த மண்ணை கடைசிவரை மிதிக்கமாட்டேன் என்று சபதம் பூண்டாரோ அவருடைய பெயரால், அவருக்கு செலுத்துகிற கடைசி மரியாதையாக நாங்கள் இணைந்து பயணிக்கின்ற பயணம் மிகவும் முக்கியமானது, மிகவும் அடிப்படையானது. எதிர்கால அரசியலில் எந்த வேறுபாடுகளும் பிரச்சினைகளும் இருந்தாலும் கூட, சின்னச் சின்ன சில்லறைப் பிரச்சினைகள் ஏராளம் இருந்தாலும் எல்லா இடங்களிலும் அந்தந்த பிரதேசங்களில் இருப்பவர்களுக்கு அவை சில்லறை பிரச்சினைகளாகத் தெரியமாட்டாது. அவைதான் தேசியப் பிரச்சினையாகத் தெரியும், அதற்குத் தீர்வு காணாமல் இதில் ஒற்றுமைக்கு இடமில்லை என்பார்கள். ஆனால், அதையும் மீறி தேசியத் தலைமைகள் இதில் வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமை காணுகின்ற அந்த விஷயம் எந்த தார்மீகத்துக்காக காங்கிரஸ் காரனாக இருந்து கொண்டு தான் 1962ஆம் ஆண்டு யாழ்ப்பாண கச்சேரிக்கு முன்னால் தன்னுடைய அந்த சமரச முயற்சியை ஆரம்பித்தாரோ அந்த முயற்சி 1970களில் கைகூடி, ஈற்றில் தந்தை செல்வாவும் ஜீ.ஜீ.பொன்னம்பலமும் 1976ஆம் ஆண்டு திடீர் என்று எங்கள் மத்தியிலிருந்து மறைந்த பின்னர், இந்த தமிழினத்தின் தானைத் தளபதியாக தானும் அண்ணன் அமிர்தலிங்கமும் அந்த பொறுப்பை ஏற்று வழிநடத்திய அண்ணன் சிவா போன்றவர்களினுடைய ஒரு அஞ்சலி நிகழ்வில் அவருக்குச் செலுத்துகிற மாபெரும் அஞ்சலியாகும்.



தொகுப்பு : எம்.என்.எம்.யஸீர் அறபாத் (பீ.ஏ) -ஓட்டமாவடி

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7